Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# மெய்வாழ்க்கை கண்டறிந்த வேந்தன்.

## புத்தர் ஞானம்.

(முருகதாசன் எழுதுகிறார்)

சுஜாதையெனும் அம்மாதரசி ஆண்டவனே என்மனது மிகச்சிறிது. வயலை ஈரமாக்கக்கூடப் போதாத சிறியமழை அப்பப் புஷ்பத்தின் கிண்ணத்தை நீரால் நிறைக்கிறது. என் நாதனது அருள் விளங்கும் கண்களிலும் என் பால் புன்னகை தவழும் முகத்திலும் உயிர் நிறைந்து பிரகாசித்து என்வீட்டை அன்பு நிறைந்த இளவேனிலாகச் செய்தால் அதுவே எனக்குப்போதும். காலையிலெழுந்து கடவுளைத்தொழுது தெய்வங்களுக்கு நைவேத்தியங்கள் செய்து தாசிமடத்தை தலைவனுக்கு வேலைக்காரிகளை அவரவர் தொழிலில் ஏற்பாடு செய்வதும், மத்தியானத்தில் என் நாயகனுக்கு அமுதூட்டி பின் விசிறிகொண்டு வீசி தாலாட்டி உறங்குவிப்பதும் அப்படியே இரவில் சூரியன் அஸ்தமித்தவுடன் என் நாயகன் பக்கத்தில் நின்று பலகாரங்கள் பரிமாறி ஆலயங்தொழுது இஷ்டர்களுடன் சம்பாஷித்து நக்ஷத்திரங்கள் மனிதரைத் தூங்குவிக்க வெள்ளி விளக்கேற்றும்போது நான் என் அவயவங்களை இளைப்பாறக்கிடத்துவதும், இப்படி என்வாழ் நாட்கள் இல்லறவிஷயமான விசாரங்களிலேயே இனிதாகக்கடந்து போகின்றன. இதோடு என் நாயகனை சுவர்க்கத்திற்குக்கொண்டு போகக்கூடிய இச்சிறுபாலனையும் பெற்றதன் பின் நான் சந்தோஷமாயிருப்பதற்குத் தடையென்ன? ஏனெனில் ஒருவன் வழிப்போக்கர்க்கு நிழல் கொடுக்க மரம் நட்டிவளர்த்தும் ஜனங்களின் சௌகர்யத்திற்காக ஒரு கிணறு வெட்டி ஒரு ஆண்பிள்ளையும் பெறுவானானல் இவைகள் அவனுக்கு மரணத்துக்குப்பின் நன்மையைக் கொடுக்குமென்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. தேவர்களுடன் பேசி வேதங்களையுண்டுபண்ணி நல்லறிவிற்கும் முத்திக்கும் வேண்டிய வழிகளையெல்லாம் அறிந்த நம் முன்னோர்களைவிட நாம் தெரிந்தவர்களல்லவாதலால் அவர்கள் சொல்வதை நான் தாழ்மையுடன் அங்கீகரிக்கிறேன். நல்வித்துக்களினின்று இனிய கனிகளும் விஷவித்துக்களிலிருந்து கசப்பானவஸ்துக்களும் உண்டாவதையும் நம்வாழ் நாட்களிற்கூட கொடுமையினால் பகைவரும் இனிமையினால் நேசரும் பொறுமையினால் அமைதியும் வாய்ப்பதையும் நாம் காண்கிறோம். ஆகையால் எவ்விடத்திலும் எக்காலத்திலும் யாவர்க்கும் நல்லதினின்று நன்மையும் தீயதினின்று தீமையும் நிச்சயமாய் உண்டாகுமென்று நம்புகிறேன். ஆகையால் நம்மை இவ்வுலகத்தினின்று மீட்க கடவுளுக்கிஷ்டமாகும் பொழுது இங்கு இப்போதிருப்பதுபோலவே அங்கும் அப்போது நன்மையாக விராதோ? இதனிலும்நல்லதாகவேயிருக்கலாம். ஏனெனில் விதைக்கப்பட்ட ஒரு சிறு நெல்லினின்று ஐம்பது நெற்கள் பதித்த ஒரு கதிர் உண்டாகிறது. நக்ஷத்திரங்கள் புஷ்பித்தது போற்பிரகாசிக்கும் சண்பகத்தின் பொன்மயமான மலர்களெல்லாம் அதன் சிறிய அழகில்லாதவிதைகளில் மறைந்திருக்கின்றன. இறைவனே! பொறுமையை இருந்த இடந்தெரியாது போக்கடிக்கும் துன்பங்கள் உண்டென்பது எனக்குத்தெரியும். இக்குழந்தை இறக்குமாயின் என்னெஞ்சு பிளக்குமென்றெண்ணுகிறேன். நெஞ்சு பிளக்கவேண்டுமென்றும் முற்றும் விரும்புகிறேன். ஏனெனில் அப்போது என் குழந்தையுடன் விண்ணுலகஞ்சென்று என் மனைவிகள் வசிக்குமிடத்தில் என் நாயகன் வரவை எதிர்பார்த்திருப்பேன். ஆனல் ஸ்வாமி முன்னிறப்பதாயிருந்தால் நானும் காஷ்டமேறி தினம்போல் அவ்வருமைத் தலையை மடியில் வைத்துக்கொண்டு சந்தோஷமாகக் காஷ்டத்தில் தீமூட்டுவதை எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன். ஏனெனில் ஒரு மனைவி இப்படி தன்னுயிரைக் கொடுப்பாளானல் அவளதன்பினால் அவள் புருஷனுக்கு அவள் தலையிலுள்ள ஒவ்வொருமயிருக்கும் ஒரு கோடி வருஷம் சுவர்க்கானுபவம் கிடைக்குமென்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. ஆகையால் சிறிதும் எனக்குப் பயமில்லை ஆசையினால் என்வாழ்வும் இனிமையாக நடைபெறுகிறது. ஆயினும் வருத்தமும், வறுமையும், பாபமும், துன்பமும் நிறைந்த மற்றவர்களை நான் சிறிதும் மறக்கவில்லை. அவர்கள் மேற் கடவுள் கிருபை வைப்பாராக வென்று பிரார்த்திக்கிறேன். எனக்கு எது வரவேண்டியதோ, எது வருமோ, அது நல்லதாகவே வருமென்று நம்பி நல்லதென்று எனக்குத் தோன்றுவதை தாழ்மையாகச் செய்யவும், சட்டத்துக்குக் கீழ்ப்படிந்து நடக்கவும் முயலுகின்றேன் என்றாள்.

அதற்கு புத்தர் உன் சிறிய அறிவு முதியோர் உணர்விலும், ஞானமுடையதாய் பெரியோர்க்கும் புத்தி புகட்டுகின்றது. நன்மையையும், கடமையையும் பற்றி உனக்குத் தெரிந்ததைக் கொண்டு திருப்தியடையக் கடவை. உன் போன்ற புஷ்பங்கள் அமைதியான நிழலிலேயே வளர வேண்டும். உச்சி வெயிலுக் கொப்பான சத்தியத்தின் ஒளி மெல்லிய தளிர்களுக்கு ஏற்றதன்று. அவைகள் அமர்ந்த வெயிலில் வளர்ந்த பின் ஜன்மங்களில் தம் உச்சிகளை உயர ஆகாயத்திற் கிளப்பி சத்தியமாகிய சூரியனது ஒளியை உண்ண வேண்டும். என்னை வணங்கிய உன்னை நான் வணங்குகிறேன். அன்பினாலேயே கூட்டிற்குப் பறந்து போகும் புறாவைப்போல் அறியாமலே கற்றுணர்ந்த உன்னிடத்திலிருந்தே தூயநறும் மனிதர்க்கு நற்கதி யுண்டென்பது தெரியவருகிறது. நீ சுகமே போ. நீ எக்காலமும் சந்தோஷமாயிருக்கக் கடவை. உன் எண்ணம் நிறைவேறியதுபோல என் காரியமும் கை கூடக் கடவதாக வேண்டிக்கொள் என, அவளும், நீரும் உமது காரியத்திற் சித்தியடையக் கடவீர் என்று சொல்லி தன் வீட்டை நோக்கித் திரும்பினாள்.

உடனே புத்தர் அவள் கொடுத்த உணவினால் பலமடைந்து அதன் கீழ் அவர் ஞானமடைந்ததினால் போதிமர மென்ற பெயர் பெற்ற ஒரு பெரிய விருட்சத்தின் கீழ்ச் சென்றார்.

போதிமர மென்றால் போதம், அறிவு என்ற சமஸ்கிருத பதத்தினின்று வந்தது. இதே வாக்கினின்று தான் புத்தன் என்ற பெயரும் கௌதமருக்குவந்தது. அம்மரத்தின் கீழ் அவருக்கும் காமாதிகளுக் கரசனாகிய மாரனுக்கும் பெரிய போர் நடந்து அதில் அவர் ஜெயித்ததாகவும், மறுநாள் காலையில் சூரிய வுதயத்துடன் உலகமுழுவதும் சமாதானமாயிருந்ததாகவும் கதை. அதனால் கௌதம புத்தருக்கு மாரஜித் என்றும் பெயர். போதிமரம் அரசமரமாம். அதை புத்தர்களும், இந்துக்களும் புண்ணிய விருட்சமென்று இன்னும் கொண்டாடுகிறார்கள். அதனடியில் நாகப் பிரதிஷ்டையும் நடாத்துகிறார்கள். புண்ணியம் செய்த பூண்டானும் போற்றுவதற் கென்ன தடை?

---

# ஸத்திய தரிசனம்.

## மகாத்மா காந்தியின் ஜீவியசரித்திரம்.

2-ம் பாகம். அத்தியாயம் 27.

மகாத்மா காந்தி சென்ற வாரத்திய "யங்இந்தியா"வில் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:—

என்னுடைய சகோதரியின் புருஷர் இறந்த மறுநாளே நான் பம்பாய்ப் பொதுக் கூட்டத்திற்குப் போக வேண்டியிருந்தது. என்ன பேசுவதென்று யோசிக்கவே எனக்கு அவகாசமில்லை. இரவுபகலாகக் காவலிருந்து சிசுருஷை செய்ததால் நான் களைத்துப் போயிருந்தேன். என் தொண்டையும் கட்டிக்கொண்டிருந்தது. ஆயினும், பூரணமாக கடவுளையே நம்பிக்கொண்டு நான் பம்பாய்க்குச் சென்றேன். என் பிரசங்கத்தை எழுதித் தயாரித்துக்கொள்ள வேண்டுமென்று நான் கனவிலும் கருதவில்லை.

ஸர் பிரோஸிஷாமேட்டா முன்னர் அறிவித்திருந்தபடி கூட்டத்திற்கு முதல் நாள் மாலை 5-மணிக்கு நான் அவருடைய ஆபீஸிற்குச் சென்றேன்.

"காந்தி! உன்னுடைய பிரசங்கம் தயாராக விருக்கிறதா?" என்று அவர் கேட்டார்.

நான் நடுங்கிக்கொண்டே, "இல்லை குறிப்பு எதுவுமில்லாமலே பேச உத்தேசிக்கிறேன்" என்று கூறினேன்.

"பம்பாயில் அது முடியாது. இங்கு பத்திரிகைப் பிரதிநிதிகள் நடவடிக்கை விவரங்களை யெழுதிக்கொண்டு பிரசுரிப்பது அவ்வளவு சரியாகவில்லை. இக்கூட்டத்தால் நாம் அனுகூலமடைய வேண்டுமானல் உங்களுடைய பிரசங்கத்தை எழுதி நாளைக் காலைக்குள் அச்சடித்துவிட வேண்டும். இது உங்களால் முடியுமென்று நம்புகிறேன்?" என்றார்.

எனக்குக் கொஞ்சம் கலக்கமாகத்தான் இருந்தது. ஆயினும் முயற்சி செய்வதாகக் கூறினேன்.

"அப்படியானல் உங்களுடைய பிரசங்கத்தின் எழுத்துப் பிரதியைப் பெறுவதற்கு ஸ்ரீமான் முன்ஷியை எத்தனை மணிக்கு அனுப்பலாம்?" என்று அவர் கேட்டார்.

"இன்றிரவு 11-மணிக்கு வரட்டும்" என்று பதில் கூறினேன். அடுத்த நாள் கூட்டத்திற்கு நான் சென்றபோது ஸர் பிரோஸிஷா கூறிய புத்திமதியின் விசேஷத்தையறிந்தேன். ஸர் கவாஸ்ஜி ஜிஹாங்கீர் இன்ஸ்டிட்யூட்டின் மண்டபத்தில் கூட்டம் நடந்தது. ஸர் பிரோஸிஷாமேட்டா அங்கு பேசும் போதெல்லாம் மண்டபம் முழுவதும் நிரம்பியிருக்குமென்றும், முக்கியமாக மாணவர்கள் அவருடைய பிரசங்கத்தைக் கேட்க அதிகமாகக் கூடிவிடுவார்களென்றும், மண்டபத்தில் சிறிதுமிடம் பாக்கியிராதென்றும் நான்கேள்விப்பட்டிருக்கிறேன். என்னுடைய அனுபவத்தில் அம்மாதிரிக்கூட்டத்தில் நான் கலந்துகொண்டது இது தான் முதல் தடவை. நான் பேசுவது ஒருவருக்கும் காதில் விழாதென்று எனக்குத் தோன்றியது. நான் பிரசங்கத்தைப் படிக்க ஆரம்பித்தபோது எனக்கு ஒரே கலக்கமாகவிருந்தது. ஸர் பிரோஸிஷா என்னை உற்சாகப்படுத்தி இன்னும் உரக்கப்பேசு, இன்னும் உரக்கப்பேசு என்று கூறிக்கொண்டேயிருந்தார். அதற்கு மாறாக, என்குரலை இன்னும் அமுங்குமாறு அது செய்ததாக எனக்குத்தோன்றிற்று.

என்னுடைய பழைய நண்பரான ஸ்ரீமான் கேசவராவ் தேஷ்பாண்டே என்னைக்காப்பாற்றினர். நான் என் பிரசங்கத்தை அவரிடம் கொடுத்துவிட்டேன். அவருடைய குரலதான் கூட்டத்திற்குத் தகுந்ததாகவிருந்தது. ஆனல் ஜனங்கள் அவர் படிப்பதை கேட்க மறுத்துவிட்டனர். "வாச்சா" "வாச்சா" என்ற தொனி மண்டபத்தின் நாலா பக்கங்களிலிருந்துங்கிளம்பியது. ஆகையால் ஸ்ரீமான் வாச்சா எழுந்து படித்தார். அவர் படித்ததால் ஆச்சரியமான பலனேற்பட்டது. ஜனங்கள் மிகவும் அமைதியாக விருந்து முடிவு வரையில் அவருடைய பிரசங்கத்தைக் கேட்டனர். அவசியமான சமயங்களில் கரகோஷமும், "வெட்கம், வெட்கம்" என்ற குரலோசையும் பொருத்தமாக வந்தன. இது எனக்குச் சந்தோஷமுண்டு பண்ணியது.

ஸர் பிரோஸிஷாவிற்குப் பிரசங்கம் பிடித்திருந்தது. என்னுடைய ஆனந்தத்திற்கு அளவேயில்லை.

### இருவரின் பூரண அனுதாபம்.

இக்கூட்டத்தில் ஸ்ரீமான் தேஷ்பாண்டே, ஒரு பார்ஸி நண்பர் ஆகிய இருவருடைய தீவிர ஆதரவு எனக்குக் கிடைத்தது. அந்தப்பார்ஸி நண்பர் இப்போது ஒரு பெரிய சர்க்கார் உத்தியோகஸ்தராக விருப்பதால் நான் அவருடைய பெயரைக் கூறத் தயாராகவில்லை. இருவரும் என்னுடன் தென்னாப்பிரிக்காவிற்கு வரத் தீர்மானித்திருப்பதாகத் தெரிவித்தனர். ஆனல் (அப்போது ஸ்மால் காஸ்கோர்ட் ஜட்ஜாகவிருந்த) ஸ்ரீமான் ஸி. எம். காஸெட்ஜி, அந்த நண்பர் கலியாணம் செய்துகொள்ள ஏற்பாடு செய்திருப்பதால் போகக்கூடாதென்று தடுத்தார். அவர் கலியாணம் செய்துகொள்வதா அல்லது தென் ஆப்பிரிக்கா போவதா என்று முடிவு செய்யவேண்டியிருந்தது. அவர் முதலாவதைச்செய்யவே தீர்மானித்தார். ஆனல் பார்ஸி ருஸ்டாம்ஜி இந்த வாக்குறுதி மீறப்பட்டதற்கு ஈடு செய்துவிட்டார். இவ்வாறு மீறுவதற்கு உதவியாக விருந்த ஸதிரீக்குப் பதிலாகப் பலபார்ஸி சகோதரிகள் இப்போது தங்களைக் கதர் வேலைக்கு அர்ப்பணம் செய்துகொண்டு பரிகாரம் செய்துவருகிறார்கள். ஆகையால் நான் சந்தோஷத்துடன் அந்த தம்பதிகளை மன்னித்து விட்டேன். ஸ்ரீமான் தேஷ்பாண்டேக்குக் கலியாணத் தூண்டுதல் ஒன்றுமில்லை. ஆனலும் அவர் வரமுடியவில்லை. அப்போது வாக்குறுதிப்படி நடந்ததற்காக இப்போது அவர் தாமே போதுமான பரிகாரம் செய்துவருகிறார். நான் தென் ஆப்பிரிக்காவிற்குத் திரும்பிச்செல்லுகையில் சான்ஸிபாரில் டயாப்ஜிகளில் ஒருவரைச் சந்தித்தேன். அவரும் வந்து எனக்கு உதவி செய்வதாக வாக்களித்தார். ஆனல் அவர் வரவேயில்லை. ஆகையால் பாரிஸ்டர்களை என்னுடன் தென் ஆப்பிரிக்காவிற்கு வருமாறு நான் செய்த மூன்று முயற்சிகளும் வீணாகிவிட்டன.

### ஸ்ரீமான் பெஸ்டன்ஜி பாட்சா.

இதையொட்டி எனக்கு ஸ்ரீமான் பெஸ்டன்ஜிபாட்சாவின் ஞாபகம்வருகிறது. நான் இங்கிலாந்தில் தங்கியிருந்த காலம் முதல் அவருடன் சிநேகமாக விருந்து வந்திருக்கிறேன். அவரை முதலில் லண்டனில் ஒரு மரக்கறி போஜன சாலையில் நான் சந்தித்தேன். அவருடைய சகோதரர் ஸ்ரீமான் பர்ஜோர்ஜி பாட்சாவைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். என்னைப்போல் அவரும் ஒருவிதப் பைத்தியம் பிடித்தவர். நான் அவரைச் சந்தித்ததில்லை. ஆனல் அவர் ஒரு தனிஸ்வபாவமுள்ளவர் என்று நண்பர்கள் கூறக்கேட்டிருக்கிறேன். குதிரைகளிடம் பச்சாத்தாபம் கொண்டு அவர் டிராம்காரில் ஏறவிரும்புவார். ஆச்சரியமான ஞாபக சக்தி யிருந்தபோதிலும் அவர் கலாசாலையில் படித்துப் பட்டம் பெற மறுத்துவிட்டார். அவர் தனியாக ஒருவித சக்தியை வளர்த்துவிட்டார். அவர் பார்ஸியாகப் பின்ராயினும் மரக்கறிதான் சாப்பிடுவது வழக்கம. பெஸ்டன்ஜிக்கு இந்தப் பெயரெல்லாம் கிடையாது. ஆனல் அவர் அதிகமாகக்கற்றவரென்று லண்டனிலேயே அவருக்குக் கீர்த்தி ஏற்பட்டுவிட்டது. எங்கள் இருவருக்கும் பொதுவானது மாமிச முண்ணாமை மரக்கறி சாப்பிடுவதுதான். கல்வியில் அவருக்கருகில் செல்லுவது கூட எனக்கு அசாத்தியமாக விருந்தது.

அவரை நான் பம்பாயில் மீண்டும் சந்தித்தேன். பம்பாய் ஹைக்கோர்ட்

(இதன் தொடர்பு 7-ம் பக்கம் பார்க்க)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## சென்னை சட்டசபை.

### மந்திரி சபை நிர்ணயம்.

### பலதரப்பட்ட அபிப்பிராயங்கள்.

( நமது ராஜீய நிருபர் எழுதுகிறார். )

(முன் தொடர்ச்சி.)

**ஸ்ரீமான் பி. வரதராஜுலுநாயுடு.**

இரண்டு கட்சிகளையும் இரண்டு வாரத்திற்கு முன்பு வரையும் தாக்கி எழுதிக் கொண்டு வந்தவர், ஒரு கட்சி வெற்றி பெற்றதும், அந்தக் கட்சியை ஆதரிப்பதானால் ஒரு பெரிய ராஜீய வாதியின் போக்கிற்கு அநேகமாய்பொருத்தமில்லை என்று நினைக்க வேண்டியிருக்கிறது. சமயம்போல் உயர்ந்த கையைப் பார்க்கும் வழக்கம் தற்சமயம் சாதாரணமான ராஜீய வாதிகளிடத்தில் கூட அநேகமாயில்லையே! அதுவும் சத்தியமூர்த்தி அய்யரைக் கொண்டுதான் மந்திரி சபையை அமைக்க வேண்டுமென்று கவர்னருக்கு உபதேசம் செய்கிறார். ஸ்ரீமான் நாயுடு காருவே, "சத்தியமூர்த்தி அய்யர் சுயராஜ்யக் கட்சிப் போர்வையைப் போர்த்துக் கொண்டு, தங்கள் குல கலங்கரை பிராமணீயத்தைப் பலப்படுத்த வழி தேடுகிறார். ஆகையால் பொது ஜனங்கள் ஏமார்ந்து போக வேண்டாம்" என்று எச்சரிக்கை செய்தார். ஆனால் இப்போது அவர்தான் இவருக்கு மந்திரி சபை அமைக்க வேண்டுமாம். இது என்ன கொள்கையோ நமக்கு விளங்கவில்லை!

**ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியார்.**

இவர் சுயராஜ்யக் கட்சியோடு சேர்ந்து சட்டசபைத் தேர்தல் பிரசாரத்திற்கு ஆரம்பத்தில் சிறிது வேலை செய்தார். இவருக்கு ஒத்துழையாமையின் நிர்மாணத் திட்டத்தில் தான் எப்போதும் பூர்ண நம்பிக்கையுண்டு. சட்டசபைப் பிரவேசத்தால் தேசம் நலம் பெற முடியாதென்று நன்கு அறிந்தவர். ஆயினும் இவர் முதலில் சுயராஜ்யக் கட்சியை ஆதரித்ததற்குக் காரணம், சுயராஜ்யக் கட்சித் தலைவர்கள் உத்தியோக மோகத்திலிறங்கி விடாமல் கண்காணிப்புடனிருந்து காங்கிரஸ்பெயரைக் காப்பாற்றவேயாம். அவர்கள் உத்தியோக மயக்கத்தில் சிக்குவார்களானால் காங்கிரஸ் பெயரே கெட்டுப்போகும், சுயராஜ்யக் கட்சி காங்கிரஸ் சார்பாகவே சட்டசபையில் பிரவேசிக்கிறது. இந்த கண்ணோட்டத்தைக் கொண்டு தான் முதலில் இவர் சுயராஜ்யக் கட்சியை ஆதரித்து வந்தார். பின்னால் சுயராஜ்யக் கட்சியும், ஜஸ்டிஸ் கட்சியும் வரன்முறையில்லாமல் போட்டி போட்டுக்கொண்டு தேர்தல் பிரசாரத்தில் இறங்கினதைக் கண்டு சகித்துக் கொள்ள முடியாமல் "நல்ல பிள்ளைக்கு அடையாளம் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப்போவது" என்றபடி தன் மட்டில் ஒதுங்கிக் கொண்டார். ஆனால் இந்த தேர்தல் முடிவைக் கண்டு கண்ணீர் விடுகிறார். சுயராஜ்யக் கட்சி காங்கிரஸின் அடிப்படையான நிர்மாண திட்டங்களை பற்றுக்கொண்டு கவர்ன்மெண்டோடு போட்டி போடாமல் ஜஸ்டிஸ் கட்சியோடு போட்டி போட்டு வெற்றி பெற்றிருப்பது காங்கிரஸ் கட்சியின் உண்மையான வெற்றியாகாது; ஆனால் அது கவர்ன்மெண்டின் வெற்றியேயாகுமென்று அபிப்பிராயப்படுகிறார். இப்படிப்பட்டவர் சுயராஜ்யக் கட்சியார் மந்திரி சபையை அமைத்துக் கொண்டு கவர்ன்மெண்டாரோடு உறவாட சம்மதிப்பாரா வென்று நாம் எழுதவே தேவையில்லை.

**ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார்.**

இவரும் ஸ்ரீமான் முதலியாரைப் போன்ற அபிப்பிராயமுடையவர் தான். இவர் சுயராஜ்யக் கட்சியினரை கயாக் காங்கிரஸில் முறியடித்து வெற்றி மாலை சூடியவர். தற்போது சுயராஜ்யக் கட்சியின் சட்டசபைப் பிரவேசத்தை ஆதரிப்பதற்குக் காரணம், ஸ்ரீமான் முதலியார் கொள்ளும் காரணந்தான். ஆனால் இவருக்கு தன் சுயஜாதி அபிமானம் சிறிது இருப்பதனால் தான் ஜஸ்டிஸ் கட்சியின்மேல் சீற்றம் கொள்ளுகிறார். இல்லாவிட்டால் இவரை காந்திக்கு அடுத்த படியாக எப்போதும் போல் வைத்து விடலாம். ஜஸ்டிஸ் கட்சியின் தலைவரான பனகால் ராஜாவின் ஆட்சி இவருக்கு வேண்டாமென்பது வெளிப்படை. சுயராஜ்யக்கட்சியிலுள்ள பிராமணரல்லாதாரடங்கிய மந்திரி சபையின் மேல் தனக்கிருக்கும் விருப்பை தெரிவித்திருக்கிறார்.

**ஸ்ரீமான் ஈ. வி. இராமசாமி நாயக்கர்.**

தமிழ் நாட்டில் இவரைத்தான் நாம் உண்மையான காந்தி சிடர் என்று கொள்ளமுடியும். ஆதி முதல் காங்கிரஸிற்கே தனது உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம் செய்திருக்கிறார். மகாத்மா காந்தியின் நிர்மாண திட்டத்திற்கு விரோதமாய் சுயராஜ்யக் கட்சி முளைத்ததும் அதை அப்படியே கிள்ளிவிட முயற்சித்தார். காரணம், சுயராஜ்யக் கட்சி வேஷதாரிகளின் கூட்டம் என்கிறார். சுயராஜ்யக் கட்சி பலமடைந்து சென்னையில் ஜஸ்டிஸ் கட்சியை எதிர்க்க ஆரம்பித்ததும், சுயராஜ்யக் கட்சிக்கு எதிரியாய் ஜஸ்டிஸ் கட்சியை இவர் ஆதரிக்க முற்பட்டார். இப்போது ஜஸ்டிஸ் கட்சி தோல்வியடைந்ததும், சுயராஜ்யக் கட்சியின் போலி தேச பக்தியையும், அக்கட்சித் தலைவர்களுக்கு பிராமணீயத்திலுள்ள பைத்தியத்தையும் விளக்க, ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் பொது ஜன சேவையில் இறங்க வேண்டுமென்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறார். ஜஸ்டிஸ் கட்சியார் தங்கள் கொள்கையோடு காந்தியின் நிர்மாணத் திட்டத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும் விரும்புகிறார். எப்படியும் சுயராஜ்யக் கட்சியாரை முறியடித்து தேசத்தில் பழையபடி காந்தியின் நிர்மாணத் திட்டத்தின்படி ராஜீயப் பிரசாரம் தீவிரமாக நடக்க வேண்டுமென்ற நல்ல எண்ணம் கொண்டிருக்கிறார். ஆகவே இவரை நாம் காந்தியின் உண்மைச்சிடர் என்று அழைக்கிறோம்.

## இயந்திரக் கணக்கன்.

மேனாட்டு பாங்கிகளில் சென்ற மகாயுத்தத்திற்குப் பிறகு வேலையைச் சுலபமாக்கப் பல புதிய சாதனங்கள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். முன்போல் குமஸ்தாக்கள் பக்கம் பக்கமாய் எண்களைக் கூட்டிக்கொண்டிருப்பதில்லை. இதற்குக்கூட்டல் இயந்திரம் ஒன்றிருக்கிறது. சில பெரிய பாங்கிகளின் தலைமைக் காரியாலயங்களில் இத்தகைய இயந்திரங்கள் சுமார் 200 இருக்கின்றனவாம். இன்னும் சிக்கலான கணக்குகளுக்கு மற்றோர் இயந்திரம் இருக்கிறது. இது பெருக்கவும் வகுக்கவும் செய்யும். மனிதன் எண்களை எடுத்து எழுதும் நேரத்திற்குள் இது பெருக்கி வகுத்துக் கணக்குப் போட்டு முடித்து விடுமாம். சில பாங்கிகளில் கணக்குகளின் நகல்கள் எடுப்பதற்கு புகைப்படமெடுக்குங் கருவி உபயோகிக்கப் படுகிறது. காரணம் ஒரு நொடியில் முடிந்து விடுகிறது. இதில் மற்றொரு அனுகூலம் யாதெனில், புகைப்படத்தில் ஒரு சிறு பிழை விழாது. லண்டன் பாங்கிகள் சிலவற்றில் பேரேடு பதிவதற்கு ஓர் இயந்திரம் இருக்கிறது. இது டைப்ரைட்டிங் இயந்திரமும் கூட்டல் இயந்திரமும் கலந்த ஒரு சாதனம். இந்த அதிசய இயந்திரம் பற்று வரவுத் தொகைகளைப் பதிந்து அவற்றைக் கூட்டி மிச்சம் கட்டுவதுடன் யாருடைய கணக்கிலாவது அதிகப்பற்று ஏற்பட்டால் உடனே மணியடித்து எச்சரிக்கை செய்யுமாம்.

## சென்னை சட்டசபையும், திருநெல்வேலி ஜில்லா எலெக்ஷனும்,

திருநெல்வேலி ஜில்லாவில் காங்கிரஸ் அபேக்ஷகர்களாய் நின்ற இருபேர்களும் தோல்வியுற்றதுபற்றி பலர் பலவிதமான அபிப்பிராயம் கூறிக்கொண்டிருப்பாராயினும் திருநெல்வேலியில் ஜாதிப் பிரிவினையைப் பற்றிய அபிமானமே வளர்ந்து விர்த்தியடைந்து வருகிறதென்பதற்கு இதுவும் ஓர் திருஷ்டாந்தமாகும் என்றே நாம் நினைப்போம். ஏனென்றால் ஜஸ்டிஸ் கக்ஷியைச்சேர்ந்த இரண்டு மெம்பர்களே ஒருவருக் கொருவர் விரோதமாய்ப்பிரசாரம் செய்து வந்தனர். காங்கிரஸ் சார்பாக நியமிக்கப் பட்டவர்கள் வெளிப்படையாய் அவ்விதம் செய்யாவிட்டாலும் காங்கிரஸ் அபேக்ஷகரான நிலைமையில் ஐயர் ஐயர்களாலும் நாடார் நாடார்களாலும் தனி வோட்டுரிமைப் பதிவுக்காளாய் நின்றார்கள். சில இடங்களில் இருதரப்பினரிலும் சில ஜனங்கள் ஏமாற்றப்பட்டு இருவர்களுக்கும் தமது வோட்டுரிமையைப் பக்ஷபாதமின்றிப் பங்கிட்டுக் கொடுத்திருக்கலாம். என்றபோதிலும் காங்கிரஸ் சார்பாக நின்ற இருதிறத்தினரும் இவ்வித நிலைமைக்காளானது கண்டு காங்கிரசின் பெருமையை வெகு சாதுரியமாய் எடுத்துச் சொல்லிக்கொண்டு காங்கிரஸின் மேன்மைக்காக எவ்வித தியாகத்தையும் செய்யத் தயாராயிருப்பதாய் கதர் உடை தரித்து மேடைமேல் நின்று உரத்துக்கூறிவரும் சில சுயநலப்பிரியர் தமது உண்மையான ஸ்வரூபத்தை இச்சங்கற்பத்தில் தங்களை யறியாமலே வெளிப்படுத்திக் கொண்டனர் என்பதைத் தவிர அதிகமாக நாம் இங்கு ஏதுவும் சொல்லத்தயாராயில்லை. கிராமத்தொகுதிக்கு நிறுத்தப்பட்ட இரு காங்கிரஸ் அபேக்ஷகர்களும் ஏகமனதுடையோராய் பிரசாரம் நடத்தியிருப்பின் இரண்டு ஸ்தானங்களில் ஒன்று காங்கிரசுக்கு நிச்சயமாய்க் கிடைத்திருக்குமென்பது எலெக்ஷன் கணக்குகளிலிருந்துதெரியக்கிடக்கிறது.

இச்சங்கற்பத்தில் இந்த ஜில்லாவில் நாடார்கள் மிகுந்துள்ள ஒரு தாலுகா போர்டு எலெக்ஷன் சரித்திரத்தையும் ஞாபகப்படுத்திக் கொள்வது பொருத்தமாகவேயிருக்கும். இந்த போர்டிலுள்ள பிராமணரல்லாதார் எல்லாரும் ஒன்றுகூடி பிராமணர்களை தோற்கடிக்க உத்தேசித்திருப்பதாகவும் நாடார் மெம்பர்களும் தங்களோடு சேர்ந்துகொண்டால் நாடார் ஒருவருக்கே பிரசிடெண்டுப் பதவியை அளிப்பதாகவும் ஒப்பந்தம் பேசி அவ்வண்ணமே பெரும்பாலும் நாடார்களுடைய உதவியைக் கொண்டே பிராமணர்கள் தோல்வியும்,பிராமணரல்லாதார் வெற்றியுமடைந்தனர். நாடார் பிரசிடெண்டு வேலைக்குத் தம்மைத் தெரிந்து கொள்வார்களென்ற நம்பிக்கையோடு ஷ பதவிக்கு அபேக்ஷகராக முன் வந்தார். இறுதியில் இவருக்கும் அநேக மடங்கு குறைவுபட்ட வேறொருவர் தெரிந்து கொள்ளப்பட்டார். வைஸ் பிரசிடெண்டு பதவியாகிலும் கிடைக்குமா என்று எதிர்பார்த்தார். அதுவும் இல்லையென்று சொல்லிவிட்டனர். எனவே நாடார்கள் ஓர் பிரிவு; மற்றெல்லா ஜாதியாரும் ஓர் பிரிவென்பது ஷ இரண்டு சம்பவங்களாலும் நன்கு விளங்கும். சுமார் 30 வருஷங்களுக்குமுன் சிவகாசிக் கலகத்தின் போதிருந்ததுபோல் வெளிப்படையாயில்லாவிட்டாலும் ஏரிமலையின் உட்பகுதியின் வெட்கைக்கொப்பாக இவ்வுணர்ச்சி இந்த ஜில்லாவில் சாஸ்வதமாய் நிலைபெற்றிருக்கிறதென்பதை நாடார்கள் உணர்ந்து தன்கையே தனக்குதவி என்னும் சிறந்த உபதேசத்தை மறந்து அவனோடு சேர்ந்தால் அவனாகிவிடலாம் இவனோடு சேர்ந்தால் இவனாகிவிடலாம் என்னும் அற்ப மதியை விட்டு நம்முடைய நாடார் மகாஜன சங்கத்தை உண்மையாயும் ஊக்கமாயும் ஆதரித்து அதன் மூலமாய் நமது சமூகம் விர்த்தியடையத்தக்கதாய் நம்மில் தாலுகா போர்டுகளுக்கும் சட்டசபைகளுக்கும் மெம்பாயிருக்கக்கூடிய பெரியோர்கள் பிரயாசைப்படுவதுடன், தாங்கள் தினசரி இங்கிலீஷ் பத்திரிகைகளைப் படிப்பவர்களாயிருந்த போதிலும் சமூகப்பத்திரிகையான நமது மித்திரனை வாங்கிப் படித்தும் அதில் சாதாரண ஜனங்களுக்கனுகூலமான பல விபரங்கள் பிரசுரிக்கப்படத் தக்கவாறுக விஷயதானங்கள் செய்தும் இது முதலாக விசேஷ ஊக்கமும் உணர்ச்சியும் பாராட்ட அன்பாய் வேண்டுவோம். சட்டசபையில் நாடாரொருவர் பிராமணராலும் லோக்கல் போர்டில் நாடாரொருவர் பிராமணரல்லாதாராலும் நம்பிக்கை மோசமாய் கைவிடப் பட்ட பின்னும் பிராமணன் கடையில் காப்பி சாப்பிட்டு வருவதாலும் பிராமணனைக் கொண்டு சிற்சில சமயங்களில் சமையல் வேலை செய்வித்துக் கொள்வதாலும், பிராமணர்களைப் போல் பேசிவிட்டப் பிரயாசைப்படுவதாலும் நானும் ஓர் பிராமணனாகி விட்டேனென்று நினைத்துக் கொண்டிருக்கும் நாடாரே! இப்பொழுதாவது உண்மையைக் கண்ணால் காணுவீராக.

## பலதிரட்டு.

### மாஜி கெய்ஸர்.

ஜெர்மன் தேசாதிபதியா யிருந்து வல்லரசுகளின் வீரியத்தைக் காட்டி உலகத்தையே ஓராட்டு ஆட்டிவைத்த மாஜி கெய்ஸர் படுத்த படுக்கையில் வியாதிவாய்ப் பட்டிருக்கின்றனராம்.

### கன்னையா கம்பெனியின் கருணை.

சென்னையில் சில நாட்களாக நாடகம் நடாத்திவரும் கன்னையா கம்பெனியார் பரமஏழைகட்கும், தாழ்த்தப்பட்ட மக்கட்கும் கதர் துணி விநியோகம்செய்ய ரூபாய் ஆயிரம் ஸ்ரீமான் ஸ்ரீ நிவாசய்யங்காரவர்களிடம் கொடுத்திருக்கின்றனர்.

### அவசரம்.

மார்ன் நகரில் கள்ளிடவில் வருண பகவானின் அமோக விளையாட்டில் மோட்டாரோட்டி யொருவன் திசை தெரியாது விஷசயாக வாகனத்தை ஒட்டிச்சென்றான். வந்த வேகத்தில் ஒரு வீட்டில் மோதி சுவர் வழிவிட மோட்டார் வாகனம் வீடு புகுந்து விட்டது. என்னே அவசரத்தின் புத்தி! நல்லவேளையாக ஆட்சேதமில்லை.

### ஸ்திரீ அபேக்ஷகர்களின் தோல்வி.

தென்னாட்டில் சட்டசபைக்கு அபேக்ஷகர்களாய் நின்ற ஸ்ரீமதிகளான ஆஞ்சேலோ, கமலாதேவி இருவரும் தோல்வியுற்றனர்.

### நாய் சூல்கொண்ட கொண்டாட்டம்.

திருவிடைமருதூர் மேலவீதியில் ஒரு வீட்டார் தாங்கள் அருமை பெருமையாக வளர்த்துவந்த நாய் (சூல்) கெர்ப்பந்தரித்த காரணங்கொண்டு நாய்க்கு பொன் வெள்ளிக்காப்புகளிட்டு மேளவாத்தியம் முழக்கிக் களித்தார்களாம். மொய்ப்பணம் வந்தனவாம். விருந்தும் நடந்தனவாம். இஃதோர் சர்வஜீவ சமத்வமன்றோ!

### பொம்மை ஏமாந்தது.

சித்துநாட்டில் சக்கூரில் ஓர் மாது வளையல் கடைக்குச் சென்று 60 ரூபாய்க்கு கொள்முதல்செய்தாள். பணம் தான் கொண்டுவந்திருப்பது குறைவாக யிருக்கிறபடியால் குழந்தையை வைத்துவிட்டு வீட்டுக்குச் சென்று பணம் பற்றிவருவதாகச் சொல்லிப் போனாள். நெடுது காலமாகியும் தாயார் திரும்பவில்லை. சந்தேகமாக துணியால்மூடப்பட்டிருந்த குழந்தையை கடைக்காரர் எடுத்துப்பார்க்க வியப்படைந்தார். குழந்தை ஒரு பெரிய ஜப்பான் பொம்மையாயிருந்ததாம்.

நாடார்குலமித்திரன்
அக்ஷய ஸ்ரீ கார்த்திகை மீ ௨௰௧ உ

## மந்திரி பதவி.

சட்டசபைத் தேர்தல்கள் முடிந்தும், மந்திரி பதவியாருக்குக்கிடைக்கும்? யாருக்குக்கிடைக்கவேண்டும் என்றபிரசினையே தேசமெங்கும் பெரியதாயிருந்து வருகிறது. மந்திரி பதவி யார் ஏற்றாலும், ஏற்காவிடினும் தேசத்திற்கு என்ன நன்மை விளையப்போகிறது? இதுவரையிலும் ஏற்று நடந்த மாகாணங்களிலும் ஒரு நன்மையும் விளையவில்லையென்றே சொல்கிறார்கள். ஏற்காத மாகாணத்தில் கவர்னரே மந்திரியிலாக்காவைப் பார்த்துவந்திருக்கிறாரே யன்றி அவ்வாட்சி நின்றுவிட வில்லை; நிற்கப் போகிறதுமில்லை. இந்தக் கவர்ன்மெண்டில் மந்திரி பதவி யேற்பதில் பிரயோசனமில்லையென்று சொன்னவர்களே சில இடங்களில் சுயராஜ்யக் கட்சிக்கு சிறிது வெற்றி கிடைத்துவிட்டதைக் கொண்டு அவர்களை மந்திரி பதவி ஏற்கும்படி சொல்வது என்ன நியாயம்? ஆறு வருஷங்களாக மந்திரி பதவிகளை ஏற்றுக் கெடுத்து விட்டார்களென்று கூக்குரல் போட்டவர்கள் அப்பதவியை ஏற்பது யோக்கியமாகுமா? அவர்களுக்கே அது அவமானமாயிராதா? ஒருக்கால் அவர்கள் அதை ஏற்றாலும் எதிர்பார்த்த பலனடைய முடியுமா? ஏன் இதைப் பற்றி அவ்வளவு பிரமை யேற்பட வேண்டும்?

மகாத்மா காந்தி நம் நாடு முன்னேற வேண்டுமானல், பட்டம் பதவிகளை விட்டு விடுங்கள்; விளம்பரத்தை விடுங்கள்; சிக்கனமாயிருந்து சுமுகமாய் வாழுங்கள்; ராட்டினம் சுற்றுங்கள்; கதர் கட்டுங்கள்; தேச மகாசபைக்கு நூல் தீர்வையைக் கொடுங்கள்; தீண்டாமையை ஓட்டுங்கள்; கட்குடி யகற்றுங்கள்; உங்கள் நித்திய வாழ்க்கையில் அன்பு கனிந்திருக்கட்டும்; பாரமார்த்திக ஞானம் பரவட்டும்; நீங்கள் வீரராயிருப்பீர்கள்; ஆண்டவனிடம் வேண்டியது பெறுவீர்கள் என்று கூறிய உபதேசம் சுயராஜ்பக் கோஷ்டிக்கு ஒன்றும் பிடிக்கவில்லை. அதன் மேல் நீங்கள் செய்கிறபடி செய்யலாமென்றே விட்டு விட்டார். ஆனல் லார்டு கோஷன் முதலிய கவர்னர்கள் பட்டம் பதவி தருகிறோம்; ஆடம்பரமாயிருக்கலாம்; சிக்கனம் முக்கியமல்ல; ஐரோப்பியரைப் போல் சகலவைபவங்களையும் அனுபவிக்கலாம்; வாருங்களென்று கூவி அழைக்கிறார்கள். அதுவும் தங்களுக் கிஷ்டமில்லாதவர்களைப்போல் நடிக்கிறார்கள். இந்நடிப்பு உண்மையான நடிப்பாரென்பது அஸ்ஸாம் காங்கிரஸில் வெளிப்பட்டு விடும். மகாத்மா காந்தி சொன்னபடி கேட்டிருக்க வேண்டும், அல்லது கவர்ன்மெண்டுடன் ஒத்துழையாமல் விலகி யிருந்திருக்க வேண்டும். இவ்விரண்டுமில்லாமல் இவர்கள் தேசத்திற்கு என்ன செய்ய முடியும்? என்ன செய்வார்களென்று பார்ப்போம்.

ஜஸ்டிஸ் கட்சி தோன்றி தேசத்திற்கும், பிராமணரல்லாத சமூகத்துக்கும் பெரும் நன்மை ஏற்பட்டிருக்கிறதென்பது வாஸ்தவமானாலும், மகாத்மா காந்தியின் நிர்மாணத் திட்டங்களில் கதர், ராட்டினம், கள், தீண்டாமை முதலிய முக்கிய அம்சங்களையேனும் அவர்கள் பூரணமாக ஒப்புக்கொள்ளத் தவறிவிட்டார்கள். அதனாற்றான் அவர்களுக்கு இம்முறை சிறிது தோல்வி ஏற்பட்டுவிட்டது. இனியாவது முக்கியமும், அவசியமும் என்று காண்கிற மகாத்மா காந்தி திட்டங்களை ஒப்புக் கொண்டே தீரவேண்டும். அப்படியானல் சுயேச்சை வாதிகளோடு சேர்ந்து செங்கோல் செலுத்துமென்ற வதந்தி உண்மையானாலும், தேசமும் அதை ஆதரிக்கவே செய்யும். அன்றி பழைய நிலைமையிலேயே நிற்குமானால் என்னவாகுமென்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. ஆகவே ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் தேசத்தைச் செவ்வனே சுமுகமாய்த் திரும்பிப் பார்ப்பார்களாக.

சிறிது வெற்றியும், தோல்வியும் பெற்ற சுயராஜ்யா, ஜஸ்டிஸ் கட்சிகளுக்குப் பார்க்கிலும் சுயேச்சைக் கட்சிக்கு நல்ல சந்தர்ப்பங் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. சுயராஜ்யக் கட்சியாவது, ஜஸ்டிஸ் கட்சியாவது சுயேச்சைக் கட்சியின் உதவியின்றி ஒன்றும் செய்ய முடியாதென்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சுயேச்சை வாதிகள் உள்ளத்தில் உத்தியோக ஆசையை வைத்தே "மதில் மேல் பூனைபோ"லிருந்தாலும், தேசத்தை மறந்துவிடக் கூடாது; தங்களுக்கேற்பட்டிருக்கும் நல்ல சந்தர்ப்பத்தை மறந்துவிடக்கூடாதென்று மீண்டுங் கூறுகிறோம். ஜஸ்டிஸ் கட்சி தம்மை நோக்கி வருமானால் முதலாவது மகாத்மா காந்தி முக்கியமான திட்டங்களை உண்மையில் ஒப்புக் கொண்டு நடத்த வேண்டும்; இரண்டாவது, கவர்ன்மெண்டில் கண்யமான சுயராஜ்யம் பெறல் வேண்டும் என்ற இரண்டு நிபந்தனைகளையும் வற்புறுத்தி ஒன்று சேர வேண்டும். சுயராஜ்யக் கட்சியும் தம்மை விரும்புமானால் மகாத்மா காந்தி திட்டங்களை பேருக்கு மாத்திரம் அனுஷ்டிப்பதையொழித்து உண்மையில் அனுஷ்டிக்கச் செய்யவும், தீண்டாமையை அறவே ஒழிக்கவும், ஆலயம், தெரு, கிணறு முதலிய பொதுஸ்தாபனங்களில் வேற்றுமை காட்டுவதொழியவும், பிறவியால் உயர்வு, தாழ்வு என்ற பேதமை யகற்றவும் ஆகிய சமூக சீர்திருத்தங்களுக்கு அவர்கள் எப்போதும் இணங்கி இருப்பதாக ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

இவ்விரு கட்சிகளையும் தன்மயப்படுத்துவதற்கு முன் சுயேச்சைக் கட்சியும் தகுதியுடையதாய்க் காட்டிக் கொள்ள வேண்டும்; ஏனெனில் சுயராஜ்யக் கட்சி கவர்ன்மெண்டுக்கு வெளியிலிருந்து தேசத்திற்கு நன்மை செய்வதாகச் சொல்லிக் கொண்டது. ஜஸ்டிஸ் கட்சி கவர்ன்மெண்டுக்கு உள்ளிருந்து தேசத்திற்கு நன்மை செய்ததாகச் சொல்லிக் கொண்டது. சுயேச்சைக் கட்சிக்கோ இதுவரையும் ஒரு திட்டமுங் கிடையாது. அவர்கள் கொள்கை என்னவென்பதை இன்னும் தெரியவில்லை. தாங்களும் ஜனங்களால் தெரிந்தெடுக்கப் பெற்றவர்களேயாயினும், சிரத்தையுள்ள ஜனங்கள் இரண்டு கட்சிகளின் கவனத்தைத் தான் பெற்றிருக்கிறார்கள். ஆகையால் சுயேச்சைவாதிகள் இரண்டு கட்சிக் கொள்கைகளுக்கும் மேலான ஒரு கொள்கையை மேற் கொள்ள வேண்டும். அப்போது அவர்களைத் தேர்ந்தெடுத்த ஓட்டர்களும் ஒரு கொள்கையுடையவராவார்கள் ஏதேனும் ஒரு கட்சி மறைந்தும் போகும். தேசத்தில் இரண்டு கட்சிகள் தான் நிலையுள்ளதென்பதை பொது ஜனங்கள் மனதிலும் பதிந்துவிடும். அடுத்து நடக்கப் போகும் தேர்தலில் ஏதேனும் ஒரு கொள்கையுடையவர்களையே தேர்ந்தெடுப்பார்கள். வெற்றி தோல்வி இரு கட்சிகளின்பாலே நிற்கக் கூடும். ஜெயித்தவர் தேசத்தை ஆள்வர்; தோற்றவர் ஆளும் வலிமையை அடைய முயற்சிப்பர். மூன்றாவதொரு கட்சி தோன்றி சிக்கலான ஒரு பிரசினை எழும்ப இடமிராமற் போகும். ஆட்சி சமாதானமாய் நடக்கும்; தேசமும் சுபிட்சமடையும். ஆகையால் சுயேச்சை வாதிகள் தெய்வாதீனமாகச் சென்னைச் சட்டசபைக்கு இம்முறை பெரும்பாலோர் வந்திருக்கும் நல்ல சமயத்தை நாட்டுக்கு நலன் தரும் நல்ல வழியில் உபயோகப்படுத்துவதை இழந்துவிட மாட்டார்களென்று நம்புகிறோம். அவர்களுடைய கொள்கையும், வழியும் தேசத்திற்கு இன்றியமையாப் பெருஞ் சாதகமாயிருக்குமாவென்பதை அறிய தேச ஜனங்கள் அதிக ஆவலுடையவர்களாயிருக்கிறார்களென்பதை அவர்கள் மிகவும் கவனிப்பார்களாக.

நாம் இவைகளை எழுதி முடித்த பிறகு டாக்டர் சுப்பராயன், ஸ்ரீமான்கள் ஏ. ரங்கநாத முதலியார், ஆரோக்கியசாமி முதலியார், ஆகிய சுயேச்சை வாதிகள் மந்திரிகளாக நியமனம் பெற்றுவிட்டார்களென்றும், ஒரு மகமதிய மந்திரி நியமனம் பெறக்கூடுமென்றும் தகவல் கிடைத்து சந்தோஷிக்கின்றோம். நாம் மேலே கூறியபடி சுயேச்சை வாதிகள் தங்கள் கொள்கை என்ன வென்பதை கூறத் தயங்கமாட்டார்களென்றே நம்புகிறோம். ஜஸ்டிஸ் கட்சியில் குறைந்துபோனாலும், கட்சி செத்துப்போகாமலிருந்து வரக் கூடும். சுயேச்சையைத் தழுவிப் பலப்படவுங்கூடும். சுயராஜ்யக் கட்சி இனி என்ன செய்யுமென்பதை பின் அறிவோம். வரக் கூடாதென்று பலர் முறையிட்ட ஒரு கட்சியும், வரமாட்டோமென்று விலகிய ஒரு கட்சியும் மந்திரி சபையாகாமல் வேணுமென்று ஆசைப்பட்ட கட்சிக்கே சென்னையில் விமோசன மேற்பட்டிருக்கிறது. மற்றமாகாணங்களும் சென்னையைப்பின் பற்றவுங்கூடும். இதனாலேற்படும் மாறுதலும், பலனும் என்னாகுமென்பதைப் பின்னால் அறிவோம்.

---

## தூத்துக்குடி.

### காரைப்பேட்டை நாடார் வித்தியாசாலை.

காரைப்பேட்டை வித்தியாசாலை மாணவர் சங்கம் [illegible] அக்ஷய ஸ்ரீ கார்த்திகை மீ 16 உ [illegible] பரிசோதனை தலைவர் ஸ்ரீமான் பாலையா நாடாரவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது.

அவ்வமயம் ஸ்ரீமான்கள் ஏ. ஆர். ஏ. எஸ். துரைசாமி நாடாரவர்கள், பா. செ. ரா. நடலிங்கநாடாரவர்கள், அ. தி. கலியாணசுந்தர நாடாரவர்கள், ஞா. அ. சு. சண்முகநாடாரவர்கள் மற்றும் சிலரும் விஜயஞ் செய்திருந்தார்கள். பின் மாணவர்களால் பாடல்களும், விளையாட்டுகளும், கதை, சம்பாஷணை, உபந்நியாசம் ஆகியவைகள் சபாரஞ்சிதத்துடன் நடைபெற்றன.

பின்னர் தலைவரவர்கள் சால மகிழ்வுற்று சிற்சில நெறிகளைப் புகட்டி தன் உள்ளவாவை வெளிக்காட்டினார்கள். இத்திருமந்திர நகரில் நாடார் குலத்தினர் அறியாமையாகிய நோயை நீக்க வல்லதோர் நல்மருந்தாம் கல்வியை தங்கள் குழந்தைகளுக்குப் புகட்டி மேலோங்கச் செய்து வருவது மிகவும் மெச்சத் தக்கதென்றும், வியாபாரம் தொழில் முறைகளை போதித்து வருவதும் மாணவர்களின் முன்னேற்றத்தைக் கருதி ஆசிரியர்களும், காஸ்பாண்டெண்டவர்களும் நிர்வாக அங்கத்தினர்களும் வேற்றுமையப்பாடின்றி ஒத்து நடந்து வருதல் மிகவும் புகழத்தக்கதென்றும், இப்பாடசாலையை ஓர் உயர்தர பாடசாலையாக்குவதற்கு ஏற்றகருவிகள் நிறைந்திருத்தலால் அவ்வாறு ஆக்குதல் நலம் என்றும், அதற்கு அவர்களாலியன்ற மட்டும் பேருதவி புரிந்துவருவதற்கு கடமைப் பட்டவராயிருப்பதாகவும் கூறி இறுதியில பாடசாலையை நடத்தும் முறையை செவ்வனே எடுத்துரைத்து மகிழ்வுடன் ஆசனத்தமர்ந்தனர்.

பின்னர் ஏ. ஆர். ஏ. எஸ். துரைச்சாமி நாடாரவர்கள் எழுந்து டிப்டி இன்ஸ்பெக்டரவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவினின்றும் பாடசாலை முறையாய் கல்வி இலாகா சட்டப்படி நடந்து வந்தமையைக் கேட்டு மிக்க மகிழ்வடைந்தோமென்றும், மாணவர்கள் அதிகாலையில் எழுந்து நீராடி கடவுளை வணங்கி பருவத்திலேயே கல்வியைக் கசடற ஆசிரியரிடத்தில் அமைதியுடன் கேட்டுப்படித்தல்வேண்டுமென்றும் சொல்லி இன்னும் இவை போன்ற நன்னீதி போதங்களை மாணவர்களுக்கு தெளிவாய் போதித்தார்கள். இறுதியில் மாணவர்களின் சார்பாக தலைவரவர்களுக்கு பூமாலைகள் சூட்டி கூட்டம் இனிது கலைந்தது.

---

### மாணிக்கத்தில் மனிதன்.

பர்மாவில் எடுக்கப்பட்டு வங்காள தனவானொருவரிடமிருக்குமொரு மாணிக்கக்கல்லில் மாதிரமுள்ள மனிதன், தலையில் தலைப்பாகை தரித்து அரையில் வெள்ளைப்பட்டாடை அணிந்து கொண்டு நிற்கும் பாவனையில் உற்று நோக்குவோர்க்குப் புலப்படுகிறானாம். இதில் ஏமாற்றொன்று மின்றென்றும் கடவுளின் கட்டளையாயிருக்கலாமெனவும் கருதப்படுகிறது.

---

### "நீர் கொழும்பு."

இலங்கைத்தீவில் கொழும்புக்கு வடக்கே யுள்ள நீர் கொழும்பு என்னுமிடம், புராதன சரித்திர சம்பந்தமானதெனச் சொல்லப்படுகிறது. அது இராவணன் மகன் இந்திரஜித்து நிகும்பலை யாகம் நடத்திய இடமாம், நிகும்பலை யெனவழங்கிய சொல் வழக்கத்தில் நீர் கொழும்பெனத் திரிவு பட்டதாகச் சொல்லப்படுகிறது.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## நாடார்களும், நாடார் மஹாஜன சங்கமும்.

பலமைல் விஸ்தீரணமுள்ள ஒரு பூபாகத்தை ஒரே வேலிக்குட்படுத்தி அதை ஏககாலத்தில் திருத்தி சாகுபடி செய்ய முயற்சிப்பதை விட அதைச் சில ஏக்கர்கள் கொண்ட பல துண்டுகளாகப் பிரிவு படுத்தி வெவ்வேறு பெயர் வழியிடம் ஒப்புவிப்பதானால் அப்பூபாகம் கூடிய சீக்கிரம் செழிப்படைந்து நல்ல பயன் தரக்கூடும். ஆதியில் மனித ஜாதி ஏக பாஷையைப் பேசி ஒரே இடத்தில் நிலவியிருந்து தங்களுடைய பெருமையைப் பூமியில் நிலைநாட்ட முற்பட்ட போது சிருஷ்டிகர்த்தன் அவர்களுடைய பாஷையைப் பிரிவுபடுத்தி ஒருவருக்கொருவர் விகற்பத்தை உண்டு பண்ணி பூமியின் பல திசையிலும் பிரிந்துபோகச் செய்தாரென்று பூர்வீக சரித்திரம் ஒன்று கூறுகிறது. அவ்விதம் செய்வதே உலக விர்த்திக்கும், தேர்ச்சிக்கும் அனுகூலமாயிருக்குமென்று ஈஸ்வரன் நினைத்தார் போலும். இவ்விதப் பெரும் பிரிவில் ப்ரகண்டமென்னும் இந்தியா நமது பங்காகும். அவ்விதமாயினுங்கூட நமது தேசம் ஒரே ஜாதியாகவாவது, ஒரே பாஷையுடையதாகவாவது, ஒரே மார்க்கமுடையதாகவாவது இன்னும் விளங்கவில்லை. ஆயினும் தேசாபிமானமென்றும், தேச முன்னேற்றம் என்றும் நமது மத்தியில் பெரிதும் புனிதமான சக்தி ஒன்று தோன்றி பலவாறும் தேசத்தவரைக் கிளர்ச்சி செய்து வருகிறது. இவ்வித பெரியதோர் கிளர்ச்சியின் எதிரே ஓர் ஜாதியார் தங்களது முன்னேற்றத்தையே கருத்தில் கொண்டு அதற்கேற்ற முறைகளைக் கையாள்வது தேசாபிமானமற்ற சுய நல உணர்ச்சி யென்று சொல்லப் பெறுமா? அல்ல. தேசமானது பெரிய ஒரு நிலமாகும். அதில் பல பிரிவினரான ஜாதியார் தத்தம் வகுப்பினரின் முன்னேற்றத்துக்காக முனைந்து பாடுபடுவது தேசத்தின் பொதுவான விர்த்திக்கு அனுகூலமான விஷயங்களேயன்றிப் பிரதிகூலங்களாகா. ஆகவே இத்தேசத்திலேற்பட்டுள்ள பல வகுப்பான சங்கங்களும், சமாஜங்களும் நம் தேய விர்த்தியின் பொருட்டேற்பட்ட தெய்வாதீனங்களென்றே சொல்லப்பெறும். நமது நாடார் மஹாஜன சங்கமும் இத்தகைய ஸ்தாபனங்களில் ஒன்றே. ஆயினும் இது வரையும் நமது சங்கம் தான் விரும்பிய அளவு தனது சமுகத்துக்கு நன்மை பயக்கும் ஸ்தானத்தை அடைந்திருக்கிறதாக சங்கத்து அங்கத்தினர் ஷை சங்க விஷயமாய் தாங்கள் செய்ய வேண்டிய கடமையைச் செய்து சங்கத்தில் நிறை வேற்றிவந்த தீர்மானங்களை தாங்கள் அனுஷ்டித்தும், மற்றவர்களை அனுஷ்டிக்கும்படியும், போதனையாலும், சாதனையாலும் பிரசாரம் செய்து வருகின்றனரா?

நாடார் மஹாஜன சங்கம் இதுவரையும் தனது ஜனங்களுக்கு ஏதும் நன்மை செய்யவில்லையா? கூடுவதும், பேசுவதும் தீர்மானங்கள் நிறைவேற்றி வைப்பதும், தவிர நமது சங்கத்துக்கு வேறு ஜோலி இல்லாத ஓர் காலமும் இருந்து வந்ததென்பதை நாம் ஞாபகப் படுத்திக் கொள்வதினால் குற்றமாகாது. இந்திய நாஷனல் காங்கிரஸ் உள்பட எல்லாச் சங்கங்களும ஆரம்ப காலத்தில் இவ்வித ஒரு நிலைமையைக் கடந்து செல்ல வேண்டியதாகவே யிருந்ததென்பது உண்மை. ஆயினும் நமது சங்கம் சென்ற சில வருஷங்களில் விசேஷ மாறுதலடைந்து தான் ஏற்பட்ட நோக்கத்திற் கிசைய கூடுமான வரை தனது சமுகத்துக்கு நன்மை செய்து கொண்டே வந்திருக்கிறது. சில கிராமங்களில் சங்கத்தின் முழு ஆதரவில் பாடசாலைகள் ஏற்பட்டுள்ளன. சில கிராமங்களிலுள்ள பள்ளிக்கூடங்களுக்குரிய செலவில் ஓர் பாகம் கிராண்ட்டாகக் கொடுக்கப்பட்டும்வருகிறது.

பல மாணவர்களுக்கு உயர்தரக் கல்விக்காக ஸ்காலர்ஷிப் வழங்கப்பட்டு வருகிறது. நமது பிள்ளைகளின் கல்வியபிவிர்த்தியின் பொருட்டு லாட்டரி சீட்டொன்றைக் கண்டு வெற்றி பெற உழைத்திருக்கிறது. பல பிரசாரகர்களை ஏற்படுத்தி சங்கத்தின் கொள்கைகளையும், நோக்கங்களையும் ஆங்காங்கு பிரஸ்தாபித்து வந்திருக்கிறது. சங்கத்தின் காரிய நிர்வாக வேலையை யாதொரு பிரதி பலன் கருதாது உண்மையுடனும், உற்சாகத்துடனும் செய்து வரும் பல பிரமுகர்கள் இச்சங்கம் தனது கொடியின் கீழ்கொண்டு சேர்த்திருக்கிறது. சங்கத்தின் ஆதரவில் நடைபெற வேண்டிய ஓர் பத்திரிகையின் அவசியத்தைப் பூர்த்திசெய்து வைக்கவேண்டிய சிரமத்தையும் பொறுப்பையும் தம்மீது ஏற்றுக்கொண்ட அபிமான புருஷர்களை இச்சங்கம் காணப்பெறவில்லையா? இன்னும் பல்வேறான நன்மைகள் இச்சங்கத்தின் தூண்டுதலாலும் முயற்சியாலும் ஏற்பட்டிருக்கின்றன. ஆயினும் நமது சங்கத்தின் முழு நோக்கத்தையும் கருத்தையும் ஷை சங்கத்தின் முக்கிய மெம்பர்களான பலர் தம் கிராமங்களில் சித்திபெறுமாறு பிரசுரம் செய்யாமலும் ஷை சங்கத்தில் தாங்களே கூடவிருந்து நிறைவேற்றிய தீர்மானங்களுக்கு விரோதமாய் தாங்களே தங்களது நடபடிகளால் நிலைகுலையச் செய்து வரவில்லையா என்று கேட்கும்படியான பல விபரீதச் செயல்களும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றனவென்பதையும் நாம் இங்கு எழுதாமலிருக்க முடியவில்லை. அவைகளில் முக்கியமான சில விஷயங்களை யாதாமொருவர் மேல் குற்றமாகச் சொல்லாமல் அக்குறைவுகளை நமது சங்கத்தின் மூலமாயும் இப்பத்திரிகை மூலமாயும் சீர்திருத்திக்கொள்ள வேண்டுமென்னும், வாஞ்சையோடும், அபிமானத்தோடுமே இப்பத்திரிகை வாயிலாய் அவைகளை வெளியிட முற்பட்டுள்ளோம்.

(தொடரும்.)

டி. பாலசுந்தர நாடார்,
செட்டியாபத்து.

## கல்லூருணியில் வெற்றிக் கொண்டாட்டம்.

இவ்வூர்கனம் தங்கிய கிராமப் பஞ்சாயத்து கோர்ட்டு பிரசிடெண்டவர்களும் பிரபலவியாபாரியும்வியவசாயமானவரும்சிறந்தநோக்கமும் சீரியகுணமும் சுயமரியாதையும் அமையப்பெற்றவரும் பொதுஜன சேவையிலீடுபட்டு வருமாகிய மகா-ள-ள-ஸ்ரீ கனம் வ. பொ. மு. விநாயகமூர்த்தி நாடார் அவர்களும் ஷையார் சகோதரிருவரும் மற்றவருமாக எட்டுப்பேர்களையும் பிரதிவாதிகளாகக் கொண்டு ஷை வ. பொ. மு. விநாயகமூர்த்தி நாடார் அவர்கள் பஞ்சாயத்து கோர்ட்டு எலெக்ஷனில் வெற்றி பெற்ற துவேஷத்தாலும் இவ்வூர் நாடாரல்லாதவர்களுக்கும் நாடார்களுக்கும் ஏற்பட்டிருந்த கக்ஷியைக்கொண்டும் ஏற்பட்ட கேஸில் பக்க கிராமங்களிலுள்ள நாடாரல்லாதாரின் உதவிபெற்று இவ்வூர் பஞ்சாக்ஷம் சுப்பிரமணிய ஐயர் வாதியாக நின்று கோர்ட்டில் வாதித்ததில் அருப்புக்கோட்டை 2-வது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டவர்களால் நாடார்கள் இராமநாதபுரம் ஜில்லா செஷன் கோர்ட்டுக்கு கமிட்டி செய்யப்பட்டு மகா-ள-ள-ஸ்ரீ கனம் செஷன் ஜட்ஜ் அவர்களால் நியாயம் விசாரிக்கபட்டு 30-11-26ல் ஷையார்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். வெற்றிகொண்ட நாடார்கள் 1-12-26 காலை 7½ மணிக்கு ஊர் வந்திறங்க எதிர்பார்த்திருந்த சுமார் 500 ஜனங்கள் புடைசூழ சுவாமி பூஜைக்குரிய சாமான்களுடன் நாடார்கள் முத்துமாரியம்பிகை ஆலயத்திற்குச் சென்று ஆங்கு அபிஷேக அலங்காரம் நடைபெற்றது. வந்த மஹாஜனங்களுக்கு சந்தனம் தாம்பூலம் சர்க்கரை வழங்கினார்கள் என்று ஸ்ரீமான் ல. வே. நாகப்ப நாடார் எழுதுகிறார்.

## கிராமப்பஞ்சாயத் எலெக்ஷன்.

சென்னைகவர்ன்மெண்ட் 1920-ம் வருஷத்திய 15-வது ஆக்ட் சட்டத்தின்படி திருச்செந்தூர் தாலுகாவிலுள்ள மேலத்திருச்செந்தூர், குதிரைமொழி, காயாமொழி ஆகிய 3 பெரிய சிவினியூ கிராமங்களை ஒன்று சேர்த்து காயாமொழி கிராமப் பஞ்சாயத் என்ற பெயருடன் ஜாங்கிஷனுபடி ஷை பஞ்சாயத்திற்கு 15 மெம்பர்களைத் தேர்ந்தெடுக்க நாளது 24—11—26-ல் காயாமொழி நாடார்கள் பொதுச்சத்கையில் தூத்துக்குடி டிவிஷன் ஆனரெரி ஆர்கனைசரான ஸ்ரீமான் க. பி. கெங்கை ஆதித்தநாடாரவர்களின் அக்ராசனத்தின் கீழ் நடைபெற்றது. ஸ்ரீமான்களான 1 சு. அழகானந்த ஆதித்த நாடார், 2 ரா. புதுநயினார் ஆதித்த நாடார், 3சு. சிவசுந்தரபார்வதிஆதித்த நாடார், 4 சொ. ஆறுமுகப்பெருமாள் ஆதித்தநாடார், 5 எஸ். என். சுந்தரக்குமார் ஆதித்தநாடார், 6 தை. சுப்ரமணிய ஆதித்தநாடார், 7 பா. பார்வதி ஆதித்தநாடார், 8 செ. மு. க. சாகுலமீதுமரைக்கார், 9 இ. வ. ஆபிரகாம்நாடார், 10 சி. நாராயணபிள்ளை, 11 பி. பலவேசம்பிள்ளை, 12 பெ. பிச்சைக்கண்ணுநாடார், 13 ப. சு. சிவந்தி ஆதித்தநாடார், 14 மு. பொன்னையா நாடார், 15 சு. பெரியஸ்வாமிநாடார், ஆகிய 15 பெயர்களும் மெம்பர்களாக வும் அவர்களுள் தாலுகா போர்டு மெம்பரும் பிரபல மிராசுதாருமான ஸ்ரீமான் ரா. புதுநயினார் ஆதித்த நாடாரவர்கள் ஷை பஞ்சாயதபிரஸிடெண்டாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

## விருதுநகர் நாடார் வாசகசாலை 9-வது ஆண்டுநிறைவுவிழா.

இந்நகர் ராவ்பகதூர், த. இரத்தின சாமிநாடார் அவர்கள் ஞாபகச்சின்னவாசகசாலையின் ஒன்பதாவது ஆண்டுநிறைவு விழா, நாளது அக்ஷய ஹூ மார்கழிமீ 1௳ (16—12—26.) வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு வாசகசாலைக்கு முன்பாக நடைபெறும். காரைக்குடி "குமரன்" ஆசிரியர்ஸ்ரீமான் முருகப்பசெட்டியார் அவர்கள் அன்புடன் தலைமை வகிக்க இசைந்துள்ளார். அவ்வமயம் அறிஞர் பலர் அரியவிஷயங்களைக் குறித்து சிறந்த சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். வைபவத்தை சிறப்புடன் நடத்துவதற்கான வேலை தீவிரமாக நடந்துவருகின்றது. தமிழ் நாட்டில் முதன்மையான நூல் நூற்றதற்காக மகாத்மாவிடமிருந்து பரிசுபெற்ற திருப்புவனம் ஸ்ரீமான் வெ. மீனாக்ஷி சுந்தரம்பிள்ளை அவர்களைக்கொண்டு நூல் நூற்றல் காக்ஷிநடைபெறும்.

சிறு தேசிய நாடகமொன்றும் நடத்திக்காட்டுவதற்கான வேலையும் நடந்து வருகின்றது.

அன்பர்களெல்லோரும் விஜயம் செய்து வைபவத்தை சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

பி. சோக்கலிங்கம்,
உதவிக்காரியதரிசி.

## மதுரைஜில்லா காங்கிரஸ்கமிட்டி.

ஐயன்மீர்!

சென்ற நவம்பர்மீ 28௳யில் கூடியமதுரைஜில்லாகாங்கிரஸ்கமிட்டியின் கூட்டத்தில் ஸ்ரீமான் ப. வ. சோமசுந்தரநாடார் அவர்கள் ஷை கமிட்டி அங்கத்தினராகவும் ஷைஜில்லா காங்கிரஸ்கமிட்டி ஆபீஸுக்கு பொக்கிஷதாராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்று காங்கிரஸ் காரியதரிசி ஸ்ரீமான் எஸ். நாராயண அய்யங்கார் தெரிவிக்கிறார்.

## புதிய மந்திரிகள்.

சென்னை கவர்னர் மாற்றப்பட்ட இலாக்காக்களை நிர்வாகம் செய்ய கீழ்கண்ட மந்திரிகளை நியமித்திருக்கின்றார். அவர்களது நியமனங்கள் 4-12-26 முற்பகல் முதற்கொண்டு அமுலுக்குவரும்.

(1) ஸ்ரீமான் பரமசிவ சுப்பராயன்,
(2) ஸ்ரீமான் ஏ. ரங்கநாத முதலியார்,
(3) ஸ்ரீமான் ஆரோக்கியசாமிமுதலியார்

மந்திரிகளுக்குள் பின் கண்டவாறு மாற்றப்பட்ட இலாகாக்களின் நிர்வாகம் பிரித்துக் கொடுக்கப்படுமென்று தெரிகிறது:—

உணவுப் பொருள்கள், கலப்படம் வைத்திய இலாகா, சுகாதார இலாகா, கல்வி இலாகா, விவசாய இலாகா, கூட்டுறவு இலாகா ஆகியவைகளுக்கு ஸ்ரீமான் ஏ. ரங்கநாத முதலியார். ஸ்தல சுய ஆட்சி இலாகா, சில்லரை ரயில் பாதைகள், மத ஸ்தாபனங்கள், மராமத்திலாகா ஆகியவைகளுக்கு ஸ்ரீமான் ஆரோக்கியசாமி முதலியார். கலால் இலாகா, பத்திரப் பதிவு இலாகா, மீன் இலாகா, தொழில் இலாகா, மிருக வைத்திய இலாகா, அளவைகளும் நிறைகளும் ஆகியவற்றிற்கு டாக்டர் பி. சுப்பராயன்.

### டாக்டர் பி. சுப்பராயன்.

சேலம் ஜில்லா குமார மங்கலம் ஜெமின்தார். சீமையில் ஆக்ஸ்போர்டு கலாசாலையில் படித்து எம். ஏ. பட்டம் பெற்றவர். 1889-ம் வருஷத்தில் அவர் பிறந்தார். ஆகையால் இப்பொழுதைக்கு அவருக்கு 37 வயதாகிறது. சீமைக்குப் போனதற்கு முன், சென்னையில் ஜெமின்தார்களின் பிள்ளைகளுக்காகத் தனியாக நடத்தப்பட்டு வந்த நியூயிங்டன் என்ற பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்தார். சீமையிலேயே சட்டப்பரீட்சையிலும் தேறினார். சிறிதுகாலம் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்திருந்தார். மத்ய நிலச்சுவான்தார்கள் தொகுதியால் தேர்ந்தெடுக்கப்பட்டு அரசியல் திருத்தம் அனுஷ்டானத்திற்கு வந்தது முதல் சட்டசபை அங்கத்தினராக இருந்து வருகிறார். சட்டசபையில் காரியதரிசியாக 1921, 22ம் வருஷங்களில் இருந்தார். பிறகு ஜஸ்டிஸ் கட்சியிலிருந்து பிரிந்து தேசியக் கட்சியில் சேர்ந்திருந்தார். இப்பொழுது சுயேச்சை வாதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

### ஸ்ரீமான் ஏ. ரங்கநாத முதலியார்.

1879-ம் வருஷத்தில் பிறந்தவர். ஆகையால் இப்பொழுது 47 வயதாகிறது. பட்டங்கள்பெற்ற பிறகு சர்க்கார் ஊழியத்தில் 1901-ம் வருஷத்தில் புகுந்து 1911 வருஷத்தில் டிப்டி கலெக்டராகச் செய்யப்பட்டார். இரண்டு வருஷங்களுக்குப் பிறகு உத்தியோகத்தை ராஜீநாமா செய்துவிட்டு, பொதுஜன சேவையில் இறங்கிவிட்டார். பிரம்மஞான சபையில் முக்கியஸ்தர்களில் ஒருவர். 1924-ம் வருஷத்தில் இங்கிலாந்துக்குத் தூது போயிருந்தார். சென்ற சட்டசபைகளில் பெல்லாரி ஜில்லா ஜனங்களின் பிரதிநிதியாக இருந்தார். இப்பொழுதும் அதேதொகுதியில் மூன்றாவது தடவையாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

### ஸ்ரீமான் கே. என். ஆரோக்கியசாமி முதலியார்.

கிறிஸ்தவர். 1870-ம் வருஷத்தில் பிறந்தவர். ஆகையால் இப்பொழுது வயது 56. சென்னையில் படித்து பி. ஏ. பட்டம் பெற்ற பிறகு எஞ்சினீரிங் கலாசாலையில் சேர்ந்து படித்து மராமத்திலாக்காவில் உத்தியோகம் பெற்றார். சேலம், கோயமுத்தூர் ஜில்லாக்களின் பாய்ச்சல் ஆதாரங்களைப்பற்றி கவர்ன்மெண்டுக்கு யோசனைசொல்ல விசேஷ வேலையில் 5 வருஷங்களிருந்தார். கடைசியில் சூப்பரின்டெண்டிங் ஜில்லா எஞ்சினீர் பதவியில் இருந்தவர். சென்ற சட்டசபை அக்கிராஸனாதிபதி ஸ்ரீமான் ரத்தினஸாமியை எதிர்த்துத் தேர்தலில் வெற்றி பெற்றவர்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## இந்தியாவை அடிமைப்படுத்தியதெது?

### ஜாதிக் கொடுமையின் உத்கிருஷ்டமே!

பெங்களூரில் டாக்டர், ஸர். பி. ஸி. ராய் அவர்களின் பிரசங்கம்.

இன்று நமது ஜன சமுகக்கேடுகளைப் பற்றி ஆலோசனை செய்யும் பொருட்டே நாம் இங்கு கூடியிருக்கிறோம். அது எத்துணை முக்கியம் என்பதை நீங்களே அறிந்துகொள்ளலாம். நான் வெளிநாடுகளுக்கு யாத்திரை சென்ற போதெல்லாம், கப்பலோட்டிகளும், விடுதிச் சிப்பந்திகளும் கூட, ஐயா! உங்கள் தேசத்தில் 30 கோடி ஜனங்களிருக்கிறார்கள்; இவ்வளவு பலமிருந்தும் அநேக நூற்றாண்டுகளாக ஏன் அந்நியர்களின் கீழ் அடிமை வாழ்வு வாழ்கின்றீர்கள்! என்று என்னைக் கேட்டிருக்கிறார்கள். பிரிட்டிஷ்காரர்கள் என்றால் பிரிட்டிஷ் ஐக்கிய நாட்டிலுள்ள சகல ஜனங்களென்றும், பிரஞ்சுக்காரர்களென்றால் பிரான்ஸ் தேசத்திலுள்ளவர்களென்றும், ஜெர்மானியர்களென்றால்ஜெர்மனிதேசத்திலுள்ளவர்களென்றும் அவர்கள் எண்ணுவதுபோல் 30 கோடி இந்தியர்களென்றால் இந்தியாவிலுள்ள சர்வ ஜனங்களும் ஒரே ஜாதியைச்சேர்ந்தவர்களென்று எண்ணுகிறார்களேயொழிய நமக்குள் இருக்கும் பிளவு பாடுகளை அவர்கள் அறிய முடியவில்லை. நமது தேசத்தில் ஜாதி வித்தியாசங்களிருப்பது தவிர மனிதனை மனிதன் ஏன் தொடக் கூடாதென்றும் கேட்கிறார்கள். தீண்டாமை யென்னும் கொடிய வழக்கத்துக்கு ஆதிகாரணம் தான் யாது?

பௌத்தர்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு அதிகமாக இந்தியாவை ஆண்டு வந்தனர். அப்பொழுது இந்த தீண்டாமை கிடையாது. பௌத்தர்கள் எந்தக் காரணத்தையும், எந்த ஆயுதத்தையும் கொண்டு ஜாதித்துவேஷத்தை அறவே யொழித்தார்கள். இந்த ஜாதி வித்தியாசக் கொடுமைகள் ஆதியில் இந்தியாவில் உண்டா? கிடையவே கிடையாது. இந்தியா ஏன் அந்நியர்களுடைய ஆட்சியில் இருக்கிறது என்று என்னை ஒருவர் கேட்டால் இது ஜாதி வித்தியாசத்தின் காரணம் என்று நான் சொல்வேன். இத்தகைய ஜாதி வித்தியாசம் இருந்து வரும்வரை நாம், அடிமைவாழ்வினின்றும் எழுந்திருக்க வாவது, அரசைய வாவது, அல்லது சுயேச்சையுற்றிருக்கவாவது முடியாது. அமெரிக்கா, ஐரோப்பாவிலிருந்து வரும் எந்த மனிதனையும் வரவேற்கிறது. அங்கு தன் உழைப்பால் யாரும் முன்னுக்கு வர முடியும். பற்பல ஜாதியார்கள் வருகிறார்கள். தொழில் நடத்தி ஜீவனம் செய்கிறார்கள். ஆனால் அங்கு ஜாதி வித்தியாசம் கிடையவே கிடையாது.

இங்கிலாந்தில் ஒருவிதமான ஜாதி வித்தியாச வழக்க மிருப்பதாகச்சொல்லுகிறார்கள். பிரபு வம்சத்தைச்சேர்ந்த ஒருவர் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணை விவாகம் செய்து கொண்டால், அது முறை கெட்ட விவாகமென்று கருதப்படுமாம். ஒரு தட்வை ஆக்ஸ்போர்டு கலாசாலையிலோ அல்லது கேம்பிரிட்ஜ் கலாசாலையிலோ வாசித்த மாத்திரத்தில் ஒருவன் கனவானாகிவிடுகிறான். இங்கிலாந்தில் பிரபுக்கள் சமுகத்திலும் கூட அடிக்கடி புதிய இரத்தக்கலப்பு ஏற்படுகிறது. அவர்களும் கீழான வகுப்பிலிருந்தே மேலேறியவர்களாக இருக்கக் காணலாம். ஐஸாக்ரூபாஸ் என்பவர் முதல் முதல் இந்தியாவுக்கு வந்தபொழுது, கப்பல் கூலி கொடுக்கமுடியாமல் கப்பல் கூலியாகச்சேர்ந்து கல்கத்தா வந்தார். பிறகு அதே ஐஸாக் ரூபஸ் இந்திய இராஜப் பிரதிநிதியாக வந்த பொழுது அவர் லார்டு வகுப்பில் சேர்க்கப்பட்டார். அப்பொழுது அவர்களுடைய ஜாதிவித்தியாசம் எங்கே போயிற்று? அவர்கள் ஜாதி வித்தியாசத்தை ஒழித்ததைப்போல, நீங்கள் செய்யவே முடியாது. அது இருக்கும்வரை நீங்கள் ஏக சமுகத்தினராக முடியாதென்றே சொல்லலாம். இங்கிலாந்தை ஆண்ட வில்லியம்என்ற ஜயவீரரின் தாயார் யார்? தோல் பதனிடுபவனின் குமாரியே. இன்னும் ஜனங்களுக்கெல்லாம் உபகாரியாய் விளங்கின ஸ்ரீமான் பாஸ்டரும் தோல் பதனிடுபவர்தான். நம் நாட்டில் பதனிடுபவர்களின் கதி என்ன? இவர்கள் அத்தகைய உன்னத பதவிக்கு வரமுடியுமென்று நம்மால் சொல்ல முடியுமா? நம் நாட்டு ஜாதி வித்தியாச வழக்கம் இதற்கு இடங்கொடுக்கவில்லை. இங்கிலாந்தின் முதல்மந்திரியாயிருந்த ஸ்ரீமான் லாயிட்ஜார்ஜ் ஒரு காலத்தில் தோல்பதனிடும் தொழிலையே செய்தவர்தான். நல்ல ஆகாரமில்லாமலும் மான்செஸ்டர் நகரத்தில் காலம் தள்ளிவந்தார். தேசத்துக்கு ஆபத்தான காலத்தில் அவர் மந்திரிபதவிக்கும் வந்து அரிய செயல்களைச் செய்வார் என்று யாராவது நினைத்திருக்க முடியுமா? அங்குள்ள ஜாதி வித்தியாசம் அதற்கெல்லாம் இடமளிக்கத் தடையாயில்லை. வங்காளி பாஷையில் முதல் முதல் இலக்கியம் செய்தவர் ஸ்ரீமான் வில்லியம் கேரி என்பவர். அவர் ஜாதியில் சக்கிலியன். தன்னை சக்கிலியன் என்று சொல்லிக் கொள்ளவும் அவர் பின் வாங்கவில்லை. என்றாலும் அவர் உயர்ந்த பதவியை அடைந்தார். சிநேகிதர்களே! இப்படியான தொழில் எங்கே இருக்கிறது என்றுதான் உங்களைக்கேட்கிறேன். செருப்புத் தைப்பதென்றே வைத்துக் கொள்வோம். நம் தேசத்தில் செருப்புத் தைப்பவர்கள் என்ன நிலைமையிலிருக்கிறார்கள்; அவர்களை நாம் எப்படி நடத்திவருகிறோம் என்பதைக் கவனிப்போம். தீவிரமான ஜாதிக் கொடுமையே ஒரு தேசத்தை வறுமைக்குட்படுத்துகிறது. அப்படி யிருக்கும் பொழுது உலகத்திலுள்ள மற்ற ஜாதியினர்களோடு மார் தட்டிக் கொண்டு நாம் எப்படிப் போட்டி போட எண்ண முடியும்? நம்மிடம் அதற்குரிய சக்தியும் ஆற்றலு மில்லாதிருக்கும் பொழுது அதைப்பற்றி பேசுவதில் என்ன பயன். நீங்கள் எல்லோரும் ஒரே சமுகமாய் முன் வந்தாலொழிய நீங்கள் எல்லோரும் ஒன்று என்ற உணர்ச்சியைப் பெற முடியாது. அந்த உணர்ச்சியே தேச முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. எல்லாரிடத்திலும் பொதுவான ஜாதி அபிமானம் இருந்தாலொழிய ஜனங்களை ஏக சமுகத்தினராக்க முடியாது.

இந்தியாவில் அநேகர் இஸ்லாமிய மதத்தைப் பாராட்டுகிறார்கள். அதற்குக்காரணம் இந்துமத சமுகத்தில் குடி கொண்டிருந்த ஜாதிக்கொடுமையென்றே எனக்குத் தோன்றுகிறது. இஸ்லாமிய மதத்தைப்போல் சமத்வம் சகோதரத்வம் ஆகியவற்றைப் போதிக்க சைதன்யர் தோன்றியிராவிட்டால் வங்காள மாகாணம் முழுவதும் முகமதியர்களா யிருப்பார்கள்.

ஞானம், கல்வி முதலியவை ஒரு சிலருக்கே உரியது என்று சொல்லமுடியாது. 30 கோடி ஜனங்களினிடையே இவ்விரண்டையும் ஒரு சிலர் தங்கள் வசயில் மறைத்துவைத்துக் கொள்ள முடியாது. நீங்கள் உங்கள் சகோதரரிடமிருந்து மரியாதையையும், வணக்கத்தையும் பறிமுதல்செய்வீர்களானால் உங்களிடத்திலிருந்தும் அவைகள் பறிமுதல் செய்யப்படும் என்பதை எண்ணுங்கள். நாங்கள் எங்களுடைய சகோதரர்களை சரியாய் நடத்தவேண்டுமென்று கேட்டபொழுது, கென்யர்கள் அதைத்தான் எங்களுக்குப் பதிலளித்தார்கள். இங்கு நம் சகோதரர்களுக்குரிய உரிமைகளைக் கொடுக்க மறுக்கிறோம். அதைத்தான் நாம் கென்யாவையும் கேட்கிறோம். சென்னை மாகாணத்தில் தீண்டாமை யென்னும் கொடிய வழக்கம் மிகுதியாய் இருந்து வருகிறது என்பதை முன்னமே சொன்னேன். வங்காளத்தில் நாங்கள் தீண்டாதவர்கள் என்று சொல்லப்படுபவர்களை குளம் அல்லது ஆற்றிலோ எங்கள் பக்கத்தில் நின்று குளிக்க அனுமதிக்கிறோம். ஆனால் நாங்கள் அவர்களுடன் பந்திபோஜனம் செய்வதில்லை. இனி சென்னை மாகாணத்தில் அவர்களின் நிலைமையைக் கவனிப்போம். உங்களுடன் குளிப்பதற்காவது, கடவுளைத் தொழுவதற்காவது, கல்வி பயிலவாவது அவர்கள் அனுமதிக்கப் படவில்லை. ஆலயங்களில் உயர்ந்த ஜாதியராய் இருந்தால் மாத்திரம், கோவிலுக்குள் சென்று விக்கிரஹத்துக்குப் பக்கத்தில் செல்லலாம். அதற்கு அடுத்தபடியாயிருந்தால், கெர்ப்பகிரஹம்வரை செல்லலாம். அதற்கும் அடுத்தபடியாயிருந்தால் வாசல் கதவண்டைவரைதான் போகலாம். கடைசி ஜாதியாயிருந்தால், விக்கிரஹத்தைப் பார்க்கக்கூட முடியாது. கடைசி ஜாதியினர் நீங்கள் சாப்பிடும் ஆகாரத்தைப் பார்த்தாலும் கூட நீங்கள் அதைத் திருஷ்டி தோஷமாகக் கருதுகிறீர்கள்.

பண்டைக்கால சாஸ்திரங்களே இத்தகைய அர்த்தமில்லாத கொள்கைகளாக மாறிவிட்டன. எத்தனையோ பெண்களை வைத்துக்கொள்ளலாம். ஆனால் மனிதனை மனிதன் தொடக் கூடாதென்பது எவ்வளவு கேவலம் என்பதை யோசியுங்கள், ஜப்பானியர்கள் செய்ததுபோல, உயர்ந்த ஜாதியார்களனைவரும் தாழ்ந்த மக்களை ஒரு நாள் சகோதரபான்மையுடன் மனப்பூர்வமாய் பாராட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். நீங்கள் உங்கள் தாய்நாட்டுக்கு உண்மையான மக்களென்று சொல்லுவீர்களானால் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கடமையைச் செய்யவேண்டும். தற்காலம் துருக்கி செய்துகொண்டு வருவதையும் ஞாபகப்படுத்துங்கள். இப்பொழுது முகமூடி எங்கே போயிற்று? பலமனைவிகளுடனும், பலகணவர்களுடனும் வாழும் வழக்கம் எவ்வாறாயிற்று? அதைப்போல் இந்தியாவும் ஜாதித்துவேஷத்தை ஒழிக்கப் போகிறதா? துருக்கி முதலிய தேசங்களின் நிலைமையை இந்தியா எப்பொழுது அடையப் போகிறது? தங்களுடைய பதில் என்ன? இந்தியாவின் வருங்கால நிலைமை உங்களையே பொறுத்தது. ஜாதித்துவேஷம், தீண்டாமை முதலியவைகளை ஒழித்து தேசத்தில் அடிமை வாழ்வு நீக்கவேண்டுமென்றே உங்களைக்கேட்டுக் கொள்கிறேன்.

---

## நாடார் குல மித்திரனுக்கு வாழ்த்து.

பத்திரிகை யில்லா திருந்தகுறை தீர்த்து நம்
மத்தியில் தோன்றிய மித்திர! ரத்தினே!
உத்தம குணத்துடன் உளைவளர்த் தேற்றிய
முத்துநாடாரை நாம் முதன் முதல் வாழ்த்துவோம்.
நறுமலர் நிறைந்த திருநல்லூர் தன்னிலே
இருவரும் பிறந்தோம் இருநண்பர்களானோம்
இருபத்து வருடங்களெனக்கு நீ இளையோன்
இருப்பினும் என்மன முன்னையே நாடுதே.
உன்னுடைய ஆசானெனக்குமே ஆசான்
உன்னுடைய நண்பர்களெனக்குமே நண்பர்
உணர்ச்சியுடனே நாடு உரிமைக்குழைப்பதில்
உனக்குள்ள ஆசைபோ லெனக்குமே யுண்டு.
மனதிலெந் நேரமுந் தன் கடமை மறவாத
என் குலதாசா! என தருமை நேசா!
உன்னுடனிருந் துனக் குதவிபல செய்வேன்
என்றுமுனை மறவேன் எனதாசி தருவேன்.

P. E. P. நாடார்.

---

## சந்தா நேயர்களுக்கு வேண்டுகோள்.

ஐயன்மீர்.

பொது நல சேவையையே நோக்கமாய்க் கொண்டு நடத்தி வருகிற நமது பத்திரிகைக்கு ஓர் ஸ்திரமான பண்டு வேண்டுமென்று தர்ம லாட்டரி யொன்று ஏற்படுத்தி டிக்கெட் புஸ்தகங்களை அநேக சந்தா நேயர்களுக்கு அனுப்பி யிருந்தோம். அவைகளைத் தயவு செய்து சீக்கிரம் விற்றுக் குறிப்பிட்ட தேதிக்குள் பணமும், கவுண்டர்பாயிலும் அனுப்பித்தரும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

இங்ஙனம் தங்களன்புள்ள

ரூ. ஆ. முத்து நாடார்,
பத்திராதிபர்.

---

## துண்டுத் துணுக்குகள்.

விவாகமாகி 20 வருஷங்களுக்குப் பிறகு நிக்கோல் என்பவருக்கும் அவரது மனைவிக்கும் 3½ ராத்தல் கனமுள்ள ஓர் ஆண் குழந்தை பிறந்திருக்கிறதாம். தகப்பன் 3 அடி 4 அங்குல உயரமும், தாய் 3 அடி 2 அங்குல உயரமாக இருக்கிறார்கள். இக்குள்ள மனிதர்கள் அமெரிக்காவில் மாண்ட்ரீல் நகரத்தில் வசிக்கிறார்களாம்.

• •

துருக்கியில் வெள்ளை ஆடை தரிக்கும் கிறமிசனும், யௌவன ஸ்திரீகளும் நீல நிறம் அல்லது பழுப்பு மஞ்சள் நிறமுள்ள காடாக்களை எக்காரணத்தைக்கொண்டும் தரிக்கக் கூடாதாம். ஏனென்றால் வெள்ளையும் நீலமும் ஆர்மீனியா, கிரீஸ் இவைகளின் தேசியக் கொடியில் காணப்படுகிறதாம்.

• •

ஒரு விநாடிக்கு உலகத்தில் மொத்தம் சுமார் 16 கோடி டன் மழை பெய்கிறதாம்.

• •

திபெத் பிரதேசத்திலுள்ளவர்கள் சிநேகிதர்களைச் சந்திக்கும் பொழுது மரியாதையின் அடையாளமாக நாக்கை நீட்டுகிறார்களாம்.

• •

ஆங்கில பாஷையில் வருஷா வருஷம் சராசரி 100 வார்த்தைகள் புதிதாகச் சேர்க்கப்படுகிறனவாம்.

• •

மூங்கில், காகிதம் செய்ய உபயோகப்படுமென்பது இப்பொழுதுதான் தெரியவந்தது. இந்தியாவில் ரொம்ப நாளாக மூங்கில் உபயோகமற்ற செடியாகக் கருதப்பட்டு வந்தது. இப்போது அது ஒரு முக்கியமான வியாபாரக்காரனாக இருக்கிறது.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## நல்ல தருமம்! நல்ல தருணம்!! நல்ல லாபம்!!!

## அருப்புக்கோட்டை

## "நாடார்குல மித்திரன்" க்ஷேம நிதி

## தர்மப்பண்டு லாட்டரிச் சீட்டு.

## மொத்தம் சீட்டுகள் 33000.

சீட்டு 1-க்கு ரூ 1.



## முதல் பிரைஸ் ரூ 3000.

1927-வரு மே மீ 4 உ க்கு பிரபவ வரு
சித்திரை மீ 22 உ பிரைஸ் எடுக்கக்கூடும்.

### 1-வது பிரைஸ் ரூ 3000.

| | | |
|---|---|---|
| 2-வது பிரைஸ் | ரூ | 1500 |
| 3-வது பிரைஸ் | ரூ | 1000 |
| 4-வது பிரைஸ் | ரூ | 500 |
| 200 ரூ-ல் 2-க்கு | ரூ | 400 |
| 100 ரூ-ல் 5-க்கு | ரூ | 500 |
| 50 ரூ-ல் 20-க்கு | ரூ | 1000 |
| 20 ரூ-ல் 50-க்கு | ரூ | 1000 |
| 10 ரூ-ல் 100-க்கு | ரூ | 1000 |
| 5 ரூ-ல் 200-க்கு | ரூ | 1000 |
| 3 ரூ-ல் 600-க்கு | ரூ | 1800 |
| 2 ரூ-ல் 2400-க்கு | ரூ | 4800 |
| ஆக பிரைஸ்கள் 3381-க்கு | ரூ | 17500 |
| புக் 1500-க்குக் கமிஷன் | ரூ | 3000 |
| குமஸ்தா சம்பளம், அச்சுக் கூலி, விசேஷக் கமிஷன் வகை யறாக்கள் | ரூ | 1800 |
| தனிப் பிரைஸ் | ரூ | 1700 |
| பண்டுக்கு | ரூ | 9000 |
| ஆக | ரூ | 33000 |

குறித்த காலத்தில் பிரைஸ் எடுக்கக் கூடும்.

33000 சீட்டுகளுக்கு மேல் விற்பனையானல் ஈவுப்படி பண்டுக்கும், செலவுக்கும் போக மீதத் தொகையை 4 ரூபாய்ப் பிரைஸ்களாக எடுக்கப்பெறும்.

1-வது பிரைஸ் முதல் 6வதுபிரைஸ்வரைவிழுந்தபுள்ளிகளிடமிருந்து முறையே 150, 75, 50, 25, 10, 10 ரூபாய் அந்தந்தச் சீட்டுவிற்றவர்களுக்குக் கமிஷன் பிடித்துக் கொடுக்கப்பெறும்.

பிரைஸ் விழுந்த புள்ளிகள் ஒரு மாதத்துக்குள் ரசிதை அனுப்பி பணம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

வெளியூர் புள்ளிகளுக்கு மணிபார்டர் கமிஷன் கழித்து பிரைஸ் தொகையை அனுப்பக்கூடும்.

சகல விதமான கடிதப் போக்குவரத்தும் சூ. ஆ. முத்து நாடார், "நாடார் குல மித்திரன்" பத்திராதிபர், அருப்புக்கோட்டை என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும். புஸ்தகம் விற்றவர்கள் தவிர மற்றவர்கள் ரிப்ளை கட்ட வேண்டும்.

### விசேஷக் கமிஷன்.

நூறு ரூபாய்க்கு மொத்தமாகச் சீட்டு விற்றுக் கொடுப்பவர்களுக்கு ஐந்து ரூபாய் விசேஷக் கமிஷன் கொடுக்கக்கூடும்.

மதுரை நாடார் மகாஜன சங்கம் முக்கியஸ்தர்களை அழைப்பித்து அவர்கள் முன்னிலையில் அருப்புக்கோட்டை, "நாடார் குல மித்திரன்" ஆபீஸில் பிரைஸ் எடுக்கப் பெறும்.

### தனிப் பிரைஸ் விபரம்.

| | | |
|---|---|---|
| 1-வது பிரைஸ் | ரூ | 100 |
| 2-வது பிரைஸ் | ரூ | 50 |
| 3-வது பிரைஸ் | ரூ | 20 |
| 4-வது பிரைஸ் | ரூ | 15 |
| 5-வது பிரைஸ் | ரூ | 10 |
| 6-முதல் 10 வரை 5 வீதம் | ரூ | 25 |
| 11-முதல் 750-வரை 2 வீதம் | ரூ | 1480 |
| ஆக | ரூ | 1700 |

தனிப் பிரைஸ், இரண்டு ரூபாய்க்கு மேற்பட்ட தொகைகள் பத்துப் பிரைஸ்களே இருப்பதால் 22 சீட்டுள்ள இரண்டு புஸ்தகம் விற்றவர்கள் தனிப் பிரைஸுக்காக ரூ 2-ம் பிடித்துக் கொண்டு ரூ 38 மட்டும் அனுப்பலாம். தனிப் பிரைஸில் சேர்த்து கொள்ள விருப்பமுடையவர்கள் தனிப் பிரைஸ் ரூ 2 பிடித்துக் கொள்ளாமல் ரூ 40-ம் அனுப்பிவைக்கவேண்டும்.

ஐந்து புஸ்தகம் விற்றவர்கள் விசேஷக் கமிஷன் ரூ 5-ம் பிடித்துக்கொண்டு மீத ரூபாயை அனுப்பி வைக்கலாம் தனிப் பிரைஸுக்குரிய ரூபாயை அனுப்பினுல் தனிப் பிரைஸில் சேர்த்துக் கொள்ளப்படும். அதற்குப் பிரியமில்லையானல் அதற்குரிய ரூ 5 யும் பிடித்துக் கொண்டனுப்பலாம்.

குறிப்பிட்ட 4—5—27-க்கு 15 நாளைக்கு முன்னதாகவே பணமும், கவுண்ட்டர்பாயிலும் கிடைக்கும்படி அனுப்பித் தர வேண்டும். நேரில் செலுத்த விரும்புவோர் ரசீது வாங்கிக் கொண்டு செலுத்த வேண்டும்.

புஸ்தகம் விற்பனை செய்தவர்களுக்கு பிரைஸ் சாபிதா தயாரானவுடன் அனுப்பக் கூடும். தனியாய் வேண்டுவோர் 1½ அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

சூ. ஆ. முத்து நாடார்,
"நாடார் குல மித்திரன்" பத்திராதிபர்.

சொ. ஆ. சொக்கலிங்கபாண்டியர்,
உப பத்திராதிபர், அருப்புக்கோட்டை.

2-ம் பக்கத்தின் தொடர்பு.)

டில் அவர் புரோத நோட்டரியாக விருந்தார். நான் அவரைச் சந்தித்த போது அவர் ஒரு உயர்தர குஜராத்தி அகராதிக்கு அவர் எழுதிக்கொண்டிருந்தார். தென் ஆப்பிரிக்கா வேலையில் எனக்கு உதவி செய்யுமாறு நான் எந்த எண்பரையும் கேட்காமல் விடவில்லை. பெஸ்டன்ஜி பாட்சா எனக்கு உதவிசெய்ய மறுத்தது மாத்திரமன்றித் தென் ஆப்பிரிக்காவிற்குத் திரும்பிப்போக வேண்டாமென்று எனக்கே போதிக்க ஆரம்பித்துவிட்டார்.

### ஒரு நண்பரின் உபதேசம்.

அவர் கூறியதாவது:—"உங்களுக்கு உதவி செய்வது அசாத்தியம். நீங்கள் தென் ஆப்பிரிக்காவிற்குத் திரும்பிச் செல்லுவதையும் நான் விரும்பவில்லை. நமது சொந்த தேசத்தில் வேலை குறைவாக இருக்கிறதா என்ன? நமது பாஷைக்குச்செய்யவேண்டியதே எவ்வளவோ இருக்கிறது. சயன்ஸ் சம்பந்தமான வார்த்தைகளை நான் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. இது வேலையின் ஒரு பிரிவுதான். நாட்டின் ஏழ்மைத்தனத்தைச் சற்று யோசியுங்கள். தென் ஆப்பிரிக்காவில் உள்ள நமது ஜனங்கள் கஷ்டப்படுவது வாஸ்தவம்தான். ஆனல் உங்களைப் போன்ற ஒரு மனிதரை அந்த வேலைக்கே விட்டுவிட நான் விரும்பவில்லை. இங்கு நாம் சுய ஆட்சி பெற்றுவிட்டோமாகில் அங்குள்ள நமது தேச ஜனங்களுக்கு அதன்மூலம்தானாகவே உதவி செய்ய முடியும். நான் உங்களைத் திருப்பமுடியாதென்று எனக்குத் தெரியும். ஆனல் உங்களைப் போன்ற மனிதர் எவரும் உங்களோடு சேர்ந்து விடுவதை நான் ஆதரிக்க மாட்டேன்."

அவருடைய உபதேசம் எனக்குப் பிடிக்கவில்லை; ஆனல் ஸ்ரீமான் பெஸ்டன்ஜிபாட்சாவிடம் எனக்குள்ள மதிப்பை இது அதிகரிக்கச் செய்தது. தேசத்தினிடத்திலும் தேசபாஷையிடத்திலும் அவருக்குள்ள அன்பைக் கண்டு நான் பிரமித்தேன். இந்த சம்பவத்தால் எங்களுக்குள் உள்ள சம்பந்தம் இன்னும் நெருங்கியது. அவருடைய மனோபாவத்தை நான் உணர முடிந்தது. ஆனல் தென் ஆப்பிரிக்காவில் என் வேலையைக் கைவிடுவதற்குப்பதிலாக என்னுடைய தீர்மானம் இன்னும் உறுதிப்பட்டது. தேசபக்தியுடைய ஒருவர் தாய்நாட்டிற்குச் செய்யக் கூடிய வேலையின் எந்தப் பிரிவையும் அலக்ஷியம் செய்யமுடியாது. கீதையில் கூறியிருக்கும் ஆக்ஞை எனக்குக் கண்டிப்பாக விளங்கியது.

"தனது வேலையில்லாத ஒன்று பார்வைக்கு நன்றாகத் தோன்றிய போதிலும் அதைச்செய்ய முயலுவதைவிட, ஒருவர் தமது சொந்தக் கடமையைச் செய்து அதில் தோல்வியடைவது கூட மேலாகும். கடமையைச் செய்துகொண்டே இறப்பது தவறல்ல; ஆனல் வேறு பாதைகளைத் தேடிக் கொண்டிருப்பவர்கள் அலைந்து கொண்டேயிருக்கவேண்டியதுதான்."